பக்கங்கள்: ஆறு

MODERN BRIGHTON SCIENCE ACADEMY VADDUKODDAI
Year: 9, 10, 11
Sat and Sun
விஞ்ஞானம்
J. R. சூரி
கணிதம்
தளையரட்ணம்

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

விலை ரூ.2-00

MODERN BRIGHTON SCIENCE ACADEMY VADDUKODDAI
Year: 9, 10, 11
புதிய பிரிவு
ஆங்கிலம்
Mr. தெய்வர்
ஆரம்பம்: 13-6-88 (Mon)
6 a. m.
A/L 89
கணக்கியல்
Mr. யோகராஜா

மடல்: 3 யாழ்ப்பாணம் விபவ ஆண்டு வைகாசி மீ 28 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1408 ஷவ்வால் பிறை 24 (10-6-1988) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்: 102

## ★ சமாதானத்தை வலியுறுத்தி

# அடுத்த புதன்கிழமை வெள்ளைக் கொடி தினம்

## வடக்கு, கிழக்குப் பகுதிகள் எங்கும் அனுஷ்டிக்க ஏற்பாடுகள்

— அலுவலகச் செய்தியாளர்: அகில்ராஜ் —

யாழ்ப்பாணம், ஜூன் 10

உடனடி யுத்த நிறுத்தம்; பேச்சுவார்த்தை அவற்றின் மூலம் சமாதானத்தை ஏற்படுத்தவேண்டும். அந்தச் சமாதானத்தையே தமிழ் மக்கள் விரும்புகிறார்கள்.

இதனை இந்திய அரசுக்கு எடுத்துக்காட்ட எதிர்வரும் புதன்கிழமை பதினைந்தாம் திகதி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வெள்ளைக் கொடித் தினம் அனுஷ்டிக்கப்படும்.

இவ்வாறு யாழ். மாநகர ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள், தாங்கள் சமாதானத்தையே விரும்புகிறார்கள் என்பதை எடுத்துக் காட்டுவதற்காக எதிர்வரும் புதன்கிழமை—

வீடுகளிலும், கட்டடங்களிலும் வெள்ளைக் கொடிகளைக் கட்டவேண்டும் என்றும்—

வெளியே செல்லும்போது சைக்கிள்கள் உட்படச் சகல வாகனங்களிலும் வெள்ளைக் கொடிகளைப் பறக்கவிடவேண்டும் என்றும்—

மாணவர்கள், ஆசிரியர்கள் பாடசாலைகளுக்குச் செல்லும்போதும், ஊழியர்கள் அலுவலகங்களுக்குச் செல்லும்போதும், வெள்ளைப் பட்டிகளை அணிந்து செல்லவேண்டும் என்றும்— கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நாம் சமாதானத்தையே வேண்டுகிறோம் என்பதையும் அதற்கான பங்களிப்பை வழங்குகிறோம் என்பதையும் எடுத்துக்காட்டுவதற்காக திரும்பும் இடம் எங்கும் வெள்ளைக் கொடிகளைப் பறக்க விடவேண்டும் எனவும் ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் கூறினார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்திருப்பதாவது:

1987 அக்டோபரிலிருந்து இந்திய அமைதி காக்கும் படையினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கைகளை ஓர் யுத்த நிறுத்தப் பிரகடனம் மூலம் நிறுத்தி சர்ச்சைக்கு உட்பட்ட விடயங்கள் பேச்சுவார்த்தை மூலம் தீர்த்து வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சமாதானத்தையும் அமைதியையும் பேணவேண்டும் என்று 1987 நவம்பர் முதற் பகுதியிலிருந்து நாம் கோரிவருகிறோம்.

இக்கோரிக்கைகள் காலத்துக்குக் காலம் பல

[6 ஆம் பக்கம் பார்க்க]

## சிறுநீரக தானம்: 30 பேர் முன்வந்தனர்

### இருவர் இளம் பெண்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 10

சிறுநீரகம் பாதிக்கப்பட்ட நோயாளிக்குச் சிறுநீரகம் தானம் செய்வதற்கு, குடாநாட்டில் 30 பேர் முன்வந்துள்ளனர்; அப்படி முன்வந்தவர்களில் இருவர் இளம் பெண்கள்.

அச்சுவேலியைச் சேர்ந்த சிவபாதம் என்ற 8 பிள்ளைகளின் தந்தை, சிறுநீரகம் பாதிக்கப்பட்டநிலையில் கொழும்பு வைத்தியசாலை ஒன்றில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

உயிருக்கு ஆபத்தான நிலையில் அவசரமாக அவருக்குச் சிறுநீரகத்தை மாற்றவேண்டி இருந்தது.

இந்நிலையில் 'உதயன்' பத்திரிகை வாயிலாகச் சிறுநீரகம் தானம் செய்யக்கோரி வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

அதனையடுத்துச் சிறுநீரகம் தானம் செய்ய 30 பேர் முன்வந்துள்ளனர். இதில் இருவர், இளம் பெண்கள் ஆவர்.

தற்பொழுது இந்த 30 பேரில் ஒருவர் தெரிவு செய்யப்பட்டு கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளார்.

அவரது இரத்தத்தின் இனம் மற்றும் உடற்கூறுகள் பற்றிப் பரிசோதிக்கப்பட்டு, மாதிரிகள் சிங்கப்பூருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

குறிப்பிட்ட நபரினது சிறுநீரகம் பொருத்தமானதாக அமையும் பட்சத்தில் சிறுநீரக மாற்றுச் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படும் என்றும் அறியவருகிறது.

(ஒ-119-9)

### உற்சவத்தை முன்னிட்டு ஊரடங்கு தளர்வு

யாழ்ப்பாணம், ஜூன் 10

பாஷையூர் அந்தோனியார் கோயில் உற்சவத்தை முன்னிட்டு எதிர்வரும் 13 ஆம் திகதி மட்டும் யாழ். மாநகரசபை எல்லைக்குள் ஊரடங்கு தளர்த்தப்பட்டிருக்கும்.

வழமையாக இரவு 9.00 மணிக்கு அமுலாகும் ஊரடங்கு அன்று நள்ளிரவு 12.00 மணிக்கே அமுலுக்கு வரும்.

இது தொடர்பான அனுமதியை பாஷையூர் அந்தோனியரர் கோயில் உற்சவ ஏற்பாட்டாளர்களுக்கு நகர கமாண்டர் அலுவலகம் வழங்கியுள்ளது. (இ)

### நேரடி தொலைபேசி

யாழ்ப்பாணம், ஜூன் 10

யாழ் கல்வித் திணைக்களத்திற்கு கொழும்பிற்கான நேரடித் தொலைபேசி தொடர்பு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை இத்தொடர்பு வழங்கப்பட்டது. (ஒ 9)

### இராணுவ நடவடிக்கையால்

## முல்லைத்தீவிலிருந்து இடம் பெயருவோருக்கு சர்வோதயம் உதவும்

யாழ்ப்பாணம், ஜூன் 10

முல்லைத்தீவுப் பகுதியில் இடம்பெற்றுவரும் இராணுவ நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்து கொண்டிருக்கும் மக்களுக்குச் சர்வோதயத்தினர் நிவாரண உதவிகளை வழங்க நடவடிக்கை எடுத்துவருகின்றனர்.

இத்தகவலைச் சர்வோதய வட்டாரங்கள் உதயன் செய்தியாளரிடம் தெரிவித்தன.

அவை மேலும் தகவல் தருகையில் கூறியதாவது:

முல்லைத்தீவுக்கு உட்பட்ட கிராமங்களில் தற்பொழுது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுவரும் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக மக்கள் இடம் பெயர்ந்து அயற் கிராமங்களில் சென்று தங்கியுள்ளார்கள்.

தற்பொழுது புதுக்குடியிருப்பைச் சேர்ந்த மக்கள் கிளிநொச்சியை நோக்கி இடம்பெயரத் தொடங்கியுள்ளார்கள். இவர்கள் தமது அத்தியாவசிய உணவுத் தேவையைக்கூடப் பூர்த்திசெய்ய முடியாமல் மிகவும் கஷ்டப்படுகின்றார்கள்.

இவர்களுக்குச் சர்வோதயம் தனது வெளியாப் பிரிவினூடாக நிவாரண உணவுப் பொருள்களை விரைவாக விநியோகிக்க நடவடிக்கை எடுத்துவருகின்றது.

இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

இதேவேளையில், குமுழமுனை, தண்ணிமுறிப்பு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களும் இடம் பெயர்ந்துவருவதாகத் தெரியவருகின்றது (ஒ-5)

### தேர்தல் தினமான நேற்று

# தெற்கில் வன்செயல்கள் எட்டுப்பேர் உயிரிழந்தனர்

## வாக்காளர் 20 பேர் காயம்

கொழும்பு ஜூன் 10

தென் மாகாணசபைத் தேர்தல் நேற்று நடைபெற்றது.

நேற்றைய தினம் தென் மாகாணத்தின் பல பகுதிகளிலும் வன்செயல்கள் பரவலாக நடைபெற்றன.

இச்சம்பவங்களின் போது பொலீஸார் அரச அதிகாரி உட்பட எட்டுப்பேர் உயிரிழந்தனர்.

ஒரு சம்பவத்தில் வாக்காளர்கள் 20 பேர் காயமடைந்தனர்.

நேற்று இடம் பெற்றதாகக் கூறப்படும் வன்செயல்கள் பற்றிய விவரங்கள் வருமாறு;

மாலிம்பொட என்னுமிடத்தில் வாக்களிப்பு நிலையம் ஒன்றைக் காவல் புரிந்த பொலீஸாரில் இரண்டு பேர் சுட்டுக் கொலைசெய்யப்பட்டனர்.

அப்போது அந்த இடத்தில் நின்ற வாக்காளரில் 20 பேர் காயமடைந்தனர்.

மித்தெனியாவில் அரசு அதிகாரி ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இரண்டு லொறிகள் எரிக்கப்பட்டன. அப்போது பாதுகாப்புப் படையினர் சுட்டதில் மூன்று பேர் உயிரிழந்தனர்.

பெலியத்தையில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### வாக்களிப்பு தாமதம்

கொழும்பு ஜூன் 10

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் இடம் பெற்ற வன்செயல்கள் காரணமாக வாக்களிப்பு தாமதித்தே ஆரம்பமானது.

ஆனாலும் தேர்தல் நன்கு நடந்தது என்று தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி. சில்வா தெரிவித்தார் (ஒ - எ)

### ஹெலி மூலம வாக்குப் பெட்டிகள்

ஹினிதும பகுதியில் உள்ள வாக்குப் பெட்டிகள், தேர்தல் முடிந்த பின்னர் ஹெலிகொப்டர்கள் மூலம் காலிக் கச்சேரிக்குக் கொண்டு வரப்பட்டன.

தெனியாய பகுதியில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறையில் தாக்கு; சிப்பாய் பலி!

கொழும்பு, ஜூன் 10

அம்பாறையில் நேற்று முன்தினம் நடந்த தாக்குதல் ஒன்றில் இலங்கை இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார். ஆறு சிப்பாய்கள் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்களில் இருவரின் நிலை கவலைக்கிடமாயிருப்பதாக அறிவிக்கப்பட்டது

அம்பாறையில் 26 ஆவது கொலனி நோக்கிச் சென்றுகொண்டிருந்த ஸ்ரீலங்கா இராணுவக் கோஷ்டி மீது மறைந்திருந்த சிலர் தாக்குதல் நடத்தியதாக சொல்லப்பட்டது [ஒ-எ]

### பிரபாவுக்கு எந்த ஆபத்தும் ஏற்படக்கூடாது

## கருணாநிதி வேண்டுகோள்

சென்னை, ஜூன் 10

தமிழீழத்தில் இந்திய இராணுவத்தினால் தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரனுக்கு எந்தவித ஆபத்தும் ஏற்படுத்தப்படக்கூடாது.

தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி தமது பிறந்த நாளை முன்னிட்டு பிரதமர் ராஜீவ் காந்திக்கு வேண்டுகோள் ஒன்றை விடுத்தார்.

அந்த வேண்டுகோளிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

என்னுடைய பிறந்த நாள் வேண்டுகோளாக தமிழ் ஈழத்தில் இந்திய இராணுவத்தினால் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. வே. பிரபாகரனுக்கு எந்த ஆபத்தும் ஏற்படுத்தப்படக்கூடாது

(6 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



என்னத்தைச் சொன்னால் என்ன......ஜே. ஆர் ஒரு மாதிரி ஏழு மாகாணங்களிலேயும் தேர்தலை நடத்திக் காட்டிப்போட்டார்......!

### சுபநேரம்

10—6—1988
வைகாசி 28
வெள்ளிக்கிழமை

சுபநேரம்:
5 52 முதல் 7.22 வரை
ராகுகாலம்:
10 22 முதல் 11 52வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
ஏகாதசி விரதம்

## நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிக்க ஸ்ரீ. ல. சு. க. முடிவு

கொழும்பு, ஜூன் 10

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கொள்கையளவில் முடிவு செய்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுதந்திரக்கட்சி பதவிக்கு வந்தவுடன் இத்தீர்மானம் அமுல் நடத்தப்படும் என்று அறிவிக்கப்படுகிறது.

சம்பிரதாயபூர்வமான ஜனாதிபதி முறையுடன் 1977க்கு முன்னர் இருந்த அரசமைப்பு முறையையே சுதந்திரக்கட்சி அமுல் நடத்தும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(ஒ எ)

### திருமலை மாவட்டத்தில்

## கிராமிய வங்கி நகைகளுக்கு நஷ்டஈடு

யாழ்ப்பாணம், ஜூன் 10

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள கிராமிய வங்கிகளில் களவுபோன நகைகளுக்கு நஷ்டஈடு வழங்கப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை திருகோணமலை மக்கள் வங்கி மேற்கொண்டுள்ளது.

கடந்த பல வருடங்களுக்கு முன்பு திருகோணமலை மாவட்டத்தில் உள்ள கிராமிய வங்கிகள் இனந்தெரியாதவர்களினால் கொள்ளையடிக்கப்பட்டன.

களவுபோன நகைகளுக்கான எதுவித நஷ்டஈடோ நிவாரணமோ இதுவரை வழங்கப்படாது இருந்தது.

எனினும் தற்போது இவற்றிற்கான நஷ்டஈட்டினை வழங்க மக்கள் வங்கி முன்வந்துள்ளது

(ஒ-10)

## இரண்டாம் ஆண்டு நினைவு

யாழ்ப்பாணம், ஜூன் 10

ஸ்ரீலங்கா இராணுவத்தால் மண்டைதீவில் வைத்து கொடூரமாக படுகொலை செய்யப்பட்ட 31 குருநகர் கடற்றொழிலாளரின் இரண்டாவது வருட ஞாபகார்த்த தினம் இன்று வெள்ளிக்கிழமை குருநகரில் நினைவு கூரப்படவுள்ளது.

இதற்காக இன்று காலை 6 மணிக்கு புனித யாகப்பர் ஆலயத்தில் பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்படும்.

அதைத் தொடர்ந்து குருநகரில உள்ள இறந்தவர்களின் நினைவுத் தூபிக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செய்யப்படும். (ஒ-5)

## ஆவரங்கால் சுற்றிவளைப்பின்போது தாமு மரணமானார்

அச்சுவேலி, ஜூன் 10

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அச்சுவேலி புத்தூர்ப் பகுதி பதில் பொறுப்பாளர் கணபதி இரத்தினம் [தாமு] சைனைட் அருந்தி வீரமரணமடைந்தார்.

புதன்கிழமை மாலை ஆவரங்கால் சந்தியில் இந்திய அமைதிப்படையினரின் சுற்றி வளைப்பின் போது இச்சம்பவம் இடம் பெற்றது.

அமைதிப்படையினரால் எடுத்துச் செல்லப்பட்ட பூதவுடல் அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையில் வைக்கப்பட்டு வியாழக்கிழமை

(6 ஆம் பக்கம் பார்க்க)

### சில பகுதிகளில்

## 7 மணி முதல் ஊரடங்கு

வடமராட்சிப் பகுதி விலும், கோப்பாய்ப் பகுதியிலும் இரவு 7 மணிக்கு ஊரடங்கு அமுல் செய்யப்பட்டு வருகிறது

அண்மையில் நிகழ்ந்த சில அசம்பாவிதங்களை அடுத்தே உத்தியோகப் பற்றற்ற விதத்தில் இந்த ஊரடங்கு அமுல் செய்யப்பட்டு வருகிறது.

இதேவேளையில் தற்பொழுது வடமராட்சிப் பகுதியில் தேடுதல்களும், சோதனைகளும் கணிசமான அளவில் குறைந்தே காணப்படுகின்றன.

வல்லைப்பகுதியில் நிலைகொண்டிருந்து போக்குவரத்து வாகனங்களை சோதனையிடுவதில் ஈடுபட்டிருந்த அமைதிப் படையினரும் கடந்த சில நாட்களாக "வல்லை" பகுதியிலிருந்து வெளியேறிவிட்டனர்.

## இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ சின்னஞ்சிறு விளம்பரம் ★

## விற்பனைக்கு

பொமேறியன் நாய்க் குட்டிகள் விற்பனைக்கு உண்டு. இடம் சேவ்றிக் கும் மக்கள் வங்கிக்கும் இடையில் No: 50 மூன்றாம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணம் (4204)

சுத்தமான புரொயிலர் கோழி இறைச்சி [Halal] விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும் M G M & Stores 777 K.K S Road Jaffna (4203)

கிணற்றடி குளியல் அறை மலசல கூடம் மாட்டுத் தொழுவம் ஆகிய இடங்களி லிட தொற்றுநீக்கியாக பயன்படுத்த M.G.M பிளீச்சிங் பவுடர் [Chlorine powder] 200gr 100gr பைக் கற்றுக்களில் எல்லா பிரபல கடைகளிலும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். விநியோகஸ்தர்கள் M G M and Stores 777 K K S Road and 208, 1st Cross Street Jaffna. [4202]

பாவித்த வீட்டுச் தளபாடங்கள் Brother தையல் மெஷின், ஒறேசெற் சாப்பாட்டு மேசை, திரைகள், அலுமாரி, சோகேஸ், காரியாலய மேசைகள், மீன்தொட்டி, Hot Plate, Dinner Set, கிராமபோன், கட்டில் மெத்தைகள், கண்ணாடி மேசைகள் மற்றும் பல உடன் மலிவு விற்பனைக்கு. M. தியாகராஜன் 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம் (சென் பற்றிஸ் சந்தி அருகே) (4388

யூனியன் மேசைத் தராசு 250 Kgm நிறை உடையது விற்பனைக்கு உண்டு. இடம் இல 30 3ஆம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணம். (4390)

சகலவிதமான T. V பூஸ்ரர், அன்ரனா வயர், றேடியோ, றேடியோ உதிரிப்பாகங்கள் கைக் கடிகாரங்கள், சுவர்க்கடிகாரங்கள் மின்விசிறிகள் சைகு மின் அடுப்புகள் T. V ஸ்ராண்ட் எவர்சில்வர் பொட்கள் றைஸ்குக்கர் எலெக்றிக் கேற்றில்களும் கரண்ட் பேட், அலையாட்டு கொண்டல் கள் வெளிப்புற பொருட்கள் மற்றும் ரவலிங் பாக்ஸ் பாடசாலை பாக்ஸ் வாங்குவதற்கு நாடுங்கள் New City Traders 135, Kasturiar Road Jaffna (C 5299

அத்தியடிப் பிள்ளையார் கோவில் சந்திக்கு அருகில் கூடிய 3/4 பரப்பு காணி விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: Mrs M இரத்தினசபாபதி 1/8 மில்லவாணை வீதி யாழ்ப்பாணம். (C5379,

ஐந்து அறை வீடு, இரு கேணி, கிணறு, மலசல கூடத்துடன் 2½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்வோர் 19/4 சுவாமியார் வீதி கொழும்புத்துறை என்ற விலாசத்தில் பிப 1 மணிக்குப் பின் சந்திக்கவும் (4371)

## சேவை

### TYPEWRITERS

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் அத்துடன் சிறந்தமுறையில் திருத்திக் கொள்ளவும் Fudo Enterprises 39/17 3rd Lane, Power House Road, Jaffna (Samy & Co— Shabra அருகாமையில்) (C5310)

## தேவை

London பரீட்சைக்கு Accounts கற்பிப்பவர்கள் தேவை. உடன் விண்ணப்பிக்கவும் C/o 227, உதயன் (C 5405)

வாருபளை கண்ணகி அம்மன் ஆலயத்திற்கு நித்திய நைமித்திய பூசை செய்வதற்கு அனுபவமுள்ள பிராமணக குருக்கள் தேவை வயது 40 க்குமேல் சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். விண்ணப்பங்களை "தலைவர்" வர்ருப்பளை அம்மன் கோவில் பரிபாலன சபை முகவரி வளை என்ற முகவரிக்கு அனுப்பவும் [4181]

பல் [Denture] வேலை தெரிந்தவர் ஆண் வேலையாள் தேவை, வயதுக் கட்டுப்பாடு இல்லை யாழ் மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது அனுபவத்திற் தகுந்த வேதனம் வழங்கப்படும் நேரில் பேசி தீர்மானிக்கலாம் முழு விபரங்களுடன் விண்ணப்பிக்கவும் உதயன் C/O228 யாழ்ப்பாணம். [4200]

கல்வி நிலையங்களில் பயன்படுத்திய வாங்கு மேசைகளை விற்க விரும்புவோர் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும். 11, கோவில் வீதி, [Temple Road] யாழ்ப்பாணம் (4398)

### மணமகள் தேவை

வடமராட்சி இந்து மகவேளாளர் குடும் த்தைச் சேர்ந்த 32 வயதுடைய எஞ்சினியர் மகனுக்கு [Chartered Civil Engineer M.c. Engineering] பெற்றோர் அதே இன பணமகளை தேடுகின்றனர் மணமகள் பட்டதாரியாக இருப்பது விரும்பத்தக்கது. சாதகக் குறிப்பு மற்றும் விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும் C/O 161, உதயன் (4394)

### இடமாற்றம்

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் ஸ்ரான்லி சலூன் நடாத்தி வந்த தங்கம் ஆகிய நான் பலலி வீதியில் ஆரிய குளம் சந்திக்கு அருகில் தங்கம் சலூன் என்ற பெயரில் புதிதாக தொழிலை ஆரம்பித்துள்ளேன் என்பதை எனது வாடிக்கையாளருக்கு அறியத் தருகின்றேன். (C/5409)

### அறிவித்தல்

ஆறுகால் மடம் நீதிராச வீதியில் (புதுறோடில்) அமைந்துள்ள கள்ளப்புறு ய'' என்னும் நெற டட, 41 கொண்ணி சைவ பரிபாலன சபை குச நதமானது. இதன் குத்தகையாளர் சந்தையா சுந்தரலிங்கம் ஆகிய நான் இக் காணியை எவருக்கும் ணகொடுத்து வாங்க வேண்டாம் என்று அறிவிக்கிறேன் குத்தகையாளர் கந்தையா சுந்தரலிங்கம். (4196)

## காணவில்லை

வடிவேலன் அகிலா என்பவரின் 675480346V இலக்கம் உடைய அடையாள அட்டையும் சில குறிப்புப் புத்தகங்களும் 7 6.88 நல்லூர் வீரமாகாளி அம்மன் ஆலய முன்றலில் தவறிவிட்டது யூலை மாதம் பரீட்சை எழுத இருப்பதால் கண்டெடுத்தோர் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (4195)

## பிறந்தநாள் வாழ்த்து

கோப்பாய் சமாதான நீதிவான் எம் கே இளையப்பு-இராசேஸ்வரி தம்பதிகளின் மகன் குமார குலசூரியன் தனதுபிறந்த தினத்தை இன்று கொண்டாடுகிறார். குமாரகுலசூரியன் நீடூழி வாழ அனைவரும் வாழ்த்துகிறார்கள் (4405)

### கோழிக்குஞ்சு விற்பனைக்கு

Hisex Golden Comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் சேவற் குஞ்சுகள், Golden Comet இரண்டு மாத ஒருயாத பிறவுண் பேட்டுக்குஞ்சுகள் (தடுப்பூசி போடப்பட்டவை) 10ந் திகதி வெள்ளிக்கிழமை விநியோகிக்கப்படும் முன் கூட்டியே பதிவு செய்க சற்குணராஜா & பிறதர்ஸ் பிரம்படி லேன் கொக்குவில் (4189)

### கோழிக்குஞ்சு விநியோகம்

ஒருநாள் Golden Comet (Christambo) B 380 Babcock shetua) பிறவுண் சேவல் குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் 10 6 88ல் விநியோகிக்கப்படும். விபரங்களுக்கு 1 R.S K Farm முருகபதி உடுவில் (மான்ஸ் பாடசாலைக்கு அருகாமை) டச்சு றோட், 2 குபேரன் ஸ்ரோஸ் கொக்குவில் சந்தி, கொக்குவில் [4199]

### வேண்டுகோள்

பருத்தித்துறை-யாழ்ப்பாணம் இ. போ. ச பஸ்ஸில் 07-06-88 ம் திகதி பிரயாணம் செய்யும் போது ஒரு தொகைப்பணம் கைப்பையுடன் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உதயன் காரியாலயத்தில், ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும் (4201)

### தவறிவிட்டது

543441970 V என் விநயகராஜா ஆகிய எனது அடையாள அட்டை வேலணையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும் அல்லது வேலணை மிருக வைத்தியர் கந்தோரில் ஒப்படைக்கவும். (4407)

சுப்பையா கணேசபிள்ளை (220900029 V) கணபதி கணேசபிள்ளை ஆகிய இருவரதும் அடையாள அட்டைகள் கொக்குவில் காங்கேசன்துறை மினி பஸ்ஸில் 5-6-88 அன்று தொலைந்து விட்டன (வயது வித்தியாசம் எமது அடையாள அட்டைகள் புதிதாக எடுப்பதில் சிரமம் இருப்பதால்) தயவு செய்து கண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். (4377)

காசோலை.27-64 தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் வே முருகேசு புகையிரத நிலைய வீதி தெல்லிப்பழைக்கு தெரியப்படுத்தவும் 4197)

ச நடராஜா மீனாட்சி நித்தியானந்தன் புனிதவதி புஸ்பராணி ஆகியோரின் அரிசிகூப்பனும், நடராஜா மீனாட்சி என்பவரின் அடையாள அட்டையும் கோப்பாய் பஸ்ஸில் 7 06 88 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இராமகிருஷ்ண No மொடன் மார்க்கட், யாழ்ப்பாணத்தில் ஒப்படைக்கவும். (4198)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

## இரண்டாம் ஆண்டு மருத்துவப் பரீட்சை

இரண்டாம் ஆண்டு மருத்துவ மீள் பரீட்சை 20-06-1988 ஆரம்பமாகும்

பதிவாளர்.

(5420)

## மீண்டும் விஷ வைத்திய சேவை

யாழ்ப்பாணம், ஜூன் 10

விஷ வைத்தியர் திரு. க. சிற்றம்பலம் மீண்டும் தமது இலவச வைத்திய சேவையை கொட்டடியில் ஆரம்பித்துள்ளார்

(இ-சி)

## Science Academy

(B. M. C க்கு முன்பாக)

துரித மீட்டல் பௌதிக வகுப்பு 13-6-88 ஆரம்பம்

திரு. மணியம்

June 13 தொடக்கம் 1' வரை நடைபெறும்

(A/L 88 மாணவர்களுக்கு)

காலை 8. 15 - 10. 30 வரை

(C 5407)

## 3 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



### செல்வன் துரைராஜா கிருஸ்ணகுமார்

தோற்றம்: 06—10—1967 மறைவு: 13—06—1985

திதி: 10-06-1988

அன்பின் உருவமாய், பண்பின் பிறப்பிடமாய், பாசத்துடன் எம்மையெல்லாம் ஆருத் துயரத்தில் ஆழ்த்திவிட்டு, எங்கு சென்றாயோ குமார்! உமது இனிய வார்த்தைகளை நினைந்து இன்றும் கவலை நீங்காதிருக்கின்றோம். உமது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உமது பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா,
அக்கா, தங்கை,
தம்பிமார்.

இராஜகாரியர் வீதி,
மானிப்பாய்-வடக்கு,
மானிப்பாய்.

(4399)

WELCOME WELCOME

வட மாகாணத்தில் மத்திய கிழக்கு நாடுகளுக்கான வேலை வாய்ப்புகளுக்கு நம்பிக்கை வாய்ந்த ஒரே ஸ்தாபனம்

# VERTEX TRAVELS

குவைற்றில் கீழ்க்காணும் பதவிகளுக்கு வெற்றிடங்கள் உண்டு

★ Electricians ★ Drivers

★ Hous: Maids ★ House Painters

ஏமாற்றத்தைத் தவிர்க்க உடன் எங்கள் அலுவலகத்துக்கு விஜயம் செய்யுங்கள்

★ Passport ★ Hotel Reservation ★ Ticketing
★ Visa ★ Van Car Rental ★ Bond

ஆகியவை மிகக் குறுகிய காலப்பகுதியில் செய்து கொடுக்கப்படும். விபரங்களுக்கு கொக்குவில் சந்தியிலுள்ள எமது அலுவலகத்துக்கு நேரில் வரவும்.

எமது ஸ்தாபனத்துக்கு இலங்கையில் எந்தப் பகுதியிலும் கிளை ஸ்தாபனமோ, அல்லது சப் ஏஜன்டுகளோ இல்லை என்பதனை அறியத்தருகின்றோம்

நன்றி

(4146)

## கல்விக்கழக வருடாந்த பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 10

யாழ் பல்கலைக்கழகம்-கல்விக்கழக வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 12 ஆம் திகதி காலை 11. 00 மணியளவில் பல்கலைக்கழக பழையநூல் நிலைய மண்டபத்தில நடைபெறும்

கூட்டத்தில் கல்வி டிப்ளோமா முழுநேர, பகுதி நேர முதலாம், இரண்டாம் வருட மாணவர்கள் முதுகலைமாணிமாணவர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்

இதற்கான ஏற்பாடுகளை கல்விக்கழச் செயலாளர் திரு சு சிவநாயகமூர்த்தி மேற்கொண்டு வருகின்றார்.

(இ-5)

## சடலம் கையளிப்பு

கிளிநொச்சி, ஜூன் 10

கடந்த 5 ஆம் திகதி பரந்தன் சந்தியில் வைத்து சைனைட் அருந்தி மரணமான இளைஞன் கேணேஸ்வரன் என்பவரது சடலம் உறவினரிடம் கையளிக்கப்பட்டது.

மரணமானவரது சடலம் ஆனையிறவு இந்திய ராணுவ முகாமில் வைத்து கிளிநொச்சி பிரசைகள் குழுவிடம் கையளிக்கப்பட்டது கிளிநொச்சி பிரசைகள் குழுவினர் சடலத்தை பெற்றோரிடம் கையளித்தனர்.

(இ-76)

## ஒலிபெருக்கி அன்பளிப்பு

வவுனியா, ஜூன் 10

பூவரசங்குளம் கிராமோதய சபை, பூவரசங்குளம் கொத்தணி பாடசாலைகள் தொகுதிக்கு 15 ஆயிரம் ரூபா பெறுமதியான ஒலிபெருக்கி சாதனங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது

(சி-164)

## முக்கிய அறிவித்தல்

# T. V. Travels & Tourist

**Brown Road,**
**(Kokuvil Railway Station Front)**
KOKUVIL.

அன்புடையீர்: தங்கள் கடவுச்சீட்டில் (Passport) Saudi Arabiக்கு (Visa) விசா அடித்து 15 நாட்களிற்கு மேல் ஆகிவிட்டது. தங்களிடம் எதுவித பணமும் அறவிடாது தங்கள் பாஸ்போட்டில் விசா அடித்து பயணம் செய்வதற்குரிய விமான ரிக்கற்றும் ஒழுங்கு செய்து தங்களிற்கு பலமுறை அறிவித்தும் தாங்கள் எதுவித கவனமும் எடுக்கவில்லை. இதனால் உண்மையில் பயணம் செய்ய உள்ளோர் தடைப்பட்டு வருகின்றனர். ஆகவே உடன் வந்து போவதற்குரிய ஒழுங்குகளைச் செய்யவும்.

## பயணம் செய்வோர் விபரம்:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (1) | P. A ராசகிளி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். | H 02 4498 | (2) | K. தேவதாஸ், பிறவுன் றோட், கொக்குவில. | G 0118104 |
| (3) | T. சோமசுந்ரம், தபாற்கந்தோர், சாவகச்சேரி. | G 0395866 | (4) | V. S. சுகுணராஜன், சந்தை வீதி, தெல்லிப்பழை. | G 0312347 |
| (5) | S கனராஜன், சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாய். | J 0235397 | (6) | S செல்வக்குமார், ஆனைக்கோட்டை | H 0245205 |
| (7) | R. கலாமோகன், பாரதி வீதி, அச்சுவேலி. | H 0256870 | (8) | S. P. துரைச்சந்திரன், சங்கத்தானை, சாவகச்சேரி. | H 0364707 |
| (9) | M. நடராசா, சங்குவேலி, மானிப்பாய். | H 0482925 | (10) | R. லிங்கேஸ்வரன், கோண்டாவில் | J 0395231 |
| (11) | S கதிர்காமநாதன், C/o காசிநாதன், கொல்லன்கலட்டி | J 0246970 | (12) | S. P. ரவீந்திரன், கிளிநொச்சி. | H 0159026 |
| (13) | N. R. தங்கராசா, ஊர்காவற்றுறை | J 0688642 | (14) | மதியாபரணம் சத்தியவண்ணன், அரசடி றோட், நீராவியடி, யாழ்ப்பாணம். | G 0132230 |
| (15) | ராசையா ரவிச்சந்திரன், உடுவில். | H 0192619 | (16) | ராமசாமி நந்தக்குமார், ராமநாதன் றோட், அரியாலை. | J 0057134 |
| (17) | S நகுலராஜா, கொக்குவில் மேற்கு, ஆனைக்கோட்டை. | J 0027701 | | | |

[C-5416]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## வடக்கு, கிழக்கிலும் விரைவில் தேர்தல்

### சிரியாவில் ராஜீவ் பேட்டி

டமஸ்கஸ், ஜூன் 9

இலங்கையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கான தேர்தல் விரைவில் நடக்கும் என்று பிரதமர் ராஜீவ் காந்தி தெரிவித்தார்.

சிரியாவின் நாளிதழ் ஒன்றுக்கு அளித்தபேட்டியில் பிரதமர் காந்தி இதனைத் தெரிவித்தார்.

சகல இன மக்களும் சுமுகமான வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும் சூழ்நிலை விரைவில் இலங்கையில் தோன்றும் என நம்புகின்றேன்.

வல்லரசுகளின் பிடியில் இருந்து இலங்கையைப் பிரித்து வைக்க இந்திய - இலங்கை ஒப்பந்தம் உதவியது.

இப்படிப் பிரதமர் காந்தி பேட்டியில் மேலும் தெரிவித்தார். [ஏ எ]


நாளை ஆரம்பம்

C. I. M. A./ A. A. T
[StagesI & II] [Prelim, & Inter]
★ WEEKEND CLASSES ★

விரிவுரையாளர் குழு:
V. கருணநிதி, S. P. சிவஞானம்,
S. சிவபாலன், S. பிலிப்,
Mrs. S. மூர்த்தி மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள்.

இது விளம்பரமல்ல!
அப்படியாயின் விளம்பரம் யாது???
எமது மாணவர்களின் கடந்த காலப் பரீட்சைப் பெறுபேறுகள் மாத்திரமே

GOOD WINE NEEDS NO BUSH

RAPID RESULTS INSTITUTE

212, கச்சேரி - நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.
[4397]



எஸ். பி. அன்ரன்
வெளி நாட்டுப் பிரயாண
★ ஒழுங்குகள் ★

☆ சவூதி அரேபியா
அமெரிக்க நிர்வாகத்தில் இயங்கும் றியாத் சுத்திகரிப்பு நிறுவனத்தில்

★ எயார்போர்ட் கிளீனர்ஸ் 450 றியால்
★ ஆஸ்பத்திரி கிளீனர்ஸ் 450 றியால்
★ ட்றைவர்கள் 650 றியால்

ஆகிய பதவிகளுக்கு உடனடியாக வாய்ப்பு உண்டு. 22—40 வயதுக்கு இடைப்பட்ட எவரும் விண்ணப்பிக்கலாம்.

☆ கனடா
☆ ஜேர்மனி
☆ இத்தாலி
☆ அவுஸ்திரேலியா

ஆறு பேரைக் கொண்ட எமது குழு கடந்த காலம், இறைவன் அருளால் வெற்றிகரமாகக் கனடாவுக்கு தமது பயணத்தை மேற்கொண்டுள்ளனர்.

மேற்படி நான்கு நாடுகளுக்கும் நம்பிக்கையான பயண ஒழுங்குகள் ஏற்பாடு செய்து தரப்படும்.

☆ குவைத்

Hospital Cleaners, Gardeners
உடனடியாகத் தேவை

கப்பல் வேலைவாய்ப்புகள்:-
Oiler, AB, Deck Boys, Mess Boys
முதலிய வேலைவாய்ப்புகள் உண்டு.

மற்றும் சகல விபரங்களுக்கும் உடனடியாகத் தொடர்பு கொள்ளுங்கள்.

எஸ். பி. அன்ரன்
வேல் றேட் சென்டர்
[மக்கள் வங்கி முன்பாக]
இல. 114, ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்.
(C-5399)


# பலாலி ஆசிரிய கலாசாலையை சிறப்பாக இயங்க வைக்க குழு

காங்கேசன்துறை, ஜூன் 10

பலாலி ஆசிரிய கலாசாலையின் இன்றைய அவல நிலை குறித்தும் உயர் மட்டத்தில் தொடர்பு கொண்டு இக் கலாசாலையை சிறப்பான முறையில் இயங்க வைக்க நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக கல்விமான்களைக் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

பலாலி ஆசிரிய கலாசாலையின் எதிர்காலம் குறித்து ஆராய்வதற்காக தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்க மண்டபத்தில் கூட்டப்பட்ட கல்விமான்களின் கூட்டத்திலேயே இக் குழு நியமனம் செய்யப்பட்டுள்ளது.

வலி. வடக்கு பிரசைகள் குழுக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டின் பேரில் நடைபெற்ற இக் கூட்டத்துக்கு முன்னாள் வடமாநில கல்விப் பணிப்பாளரும் சுன்னாகம் பிரஜைகள் குழுத் தலைவருமான திரு. தி. மாணிக்கவாசகர் தலைமை வகித்தார்.

மேற்படி குழுவுக்கு முன்னாள் வடமாநில கல்வியதிபதி திரு. தி. மாணிக்கவாசகர், முன்னாள் மகாஜனக் கல்லூரி அதிபர் திரு. ஆ. இராமசாமி, முன்னாள் பலாலி ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் திரு. க. சச்சிதானந்தன், இளைப்பாறிய ஆசிரியர் திரு. இ. அப்புத்துரை, முன்னாள் வட்டாரக் கல்வியதிகாரி திரு. பி. சிவஞானசுந்தரம், கல்வியதிகாரி திரு. பி. சோமசுந்தரம், ஒன்றியத் தலைவர் சட்டத்தரணி திரு. வி. எஸ். கணேசலிங்கம் ஆகியோர் தெரிவானார்கள்.

கூட்டத்தில் கலந்துகொண்ட கல்விமான்கள் பலரும் மேற்படி ஆசிரிய கலாசாலையின் எதிர்காலம் குறித்து கருத்துரை வழங்கினார்.

பலாலி ஆசிரிய கலாசாலை பதில் அதிபர் திரு. ஆர். எஸ். நடராசா தமதுரையில் கூறியதாவது:-

ஆசிரிய பயிற்சிக்கலாசாலையில் இப்போது 194 பயிற்சி ஆசிரியர்கள் பயிற்சி பெறுகின்றனர். யாழ் முத்துத்தம்பி வித்தியாலயத்தில் அல்லது மருதனமடம் நுண்கலைப் பிரிவில் இக் கலாசாலையை தற்காலிகமாக இயங்க வைக்க கோரினோம் ஆனால் அனுமதி வழங்கப்படவில்லை.

பல்கலைக்கழக மாணவர்களைவிட தரமான மாணவர்கள் ஆசிரிய கலாசாலையில் பயிற்சி பெறுகிறார்கள். ஆசிரிய கலாசாலையும் பல்கலைக்கழக மட்டத்தில் கருதப்பட வேண்டும்.

சமூக ஊடாட்டம் உள்ள இடத்திலேயே ஆசிரிய கலாசாலை இயங்க வேண்டும்.

திருநெல்வேலி சுன்னாகம் பகுதிகளில் அமைவது சிறந்தது. திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலயம், மருதனமடம் இராமநாதன் கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தா கல்லூரி ஆகியவற்றில் இடம் ஒதுக்கித் தருமாறு கேட்கலாம்.

இக் கலாசாலை தொடர்ந்து சிறப்பாக இயங்க சகலரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும். அல்லாது விட்டால் இங்குள்ள பயிற்சியாளர்களுக்கு பயிற்சி அளிக்க முடியாத நிலையில் பெயருக்கு மட்டும் சான்றிதழை வழங்க வேண்டிய நிலைதான் ஏற்படும்.

இப்படி அவர் கூறினார்.

முன்னாள் வடமாநிலக் கல்வி அதிபதி திரு. தி. மாணிக்கவாசகர், முன்னாள் பலாலி ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் திரு. க. சச்சிதானந்தன், முன்னாள் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. பி. சிவஞானசுந்தரம், யாழ். கல்வி அதிகாரி திரு. இ. க. குலசேகரன், தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கத் தலைவர் திரு. எஸ். சிவமகராசா, வலி. வடக்கு பிரசைகள் குழு ஒன்றியத் தலைவர் திரு. வி. எஸ். கணேசலிங்கம், முன்னாள் மகாஜனா அதிபர் திரு ஆ. இராமசாமி, வசாவிளான் மகாவித்தியாலய அதிபர் திரு நடராசா உட்பட மற்றும் பலரும் கருத்துரை வழங்கினர். (இ-68)

## ஆசிரியர் கருத்தரங்கு

மானிப்பாய், ஜூன் 10

ஆண்டு 9, 10, 11 இல் வர்த்தகமும் கணக்கியலும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான இரண்டுநாள் கருத்தரங்கு இம்மாதம் 22 ஆம் 23 ஆம் திகதிகளில் உடுவில் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும். கல்வி அதிகாரி திரு. எஸ். சிவராஜா இதனை அறிவித்துள்ளார்.

மானிப்பாய், வட்டுக்கோட்டை, காங்கேசன்துறை, கல்வி வட்டார ஆசிரியர்களுக்கே இக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கு கோப்பாய், சாவகச்சேரி கல்வி வட்டார ஆசிரியர்களுக்கு இம்மாதம் 21 ஆம் திகதி கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் நடைபெறும். (சி-90)


கொம்பியூட்டர் பயிற்சி

BASIC & COBOL

புதிய பிரிவிற்கான வகுப்புகள் ஆரம்பமாகின்றன

பிரிவு-1 : 10-06-1988 [9. 00 a. m]
பிரிவு-2 : 17-06-1988 [9. 00 a. m]

Diploma in Data Processing & Computer Programming

★ வடமாகாணத்திலேயே கூடிய நேர Practicals உம் ஒவ்வொருமாணவர்க்கும் தனிக் கவனமும் செலுத்தப்படுகிறது.

★ உலகில் பரவலாக பயன்படுத்தப்படும் I B M - P C Super / XT உட்பட பல சிறப்பான Computer களில் Practicals வழங்கப்படுகிறது.

★ பயிற்சி முடிவில் அங்கீகாரமுள்ள பதிவு செய்யப்பட்ட சான்றிதழ்களும், வேலை வாய்ப்பு ஒழுங்குகளும் செய்யப்படும்

IDP
Institute of Data Processing
K. K. S. Road — துர்க்காபுரம்,
தெல்லிப்பழை.
(C-5388)


## போதை வஸ்து எச்சரிக்கை!

குருநகர், ஜூன் 10

"குருநகர் புதியசந்தை மேல்மாடியில் போதை வஸ்து பாவிப்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்" 'எச்சரிக்கை'!

மேற்படி அறிவித்தலை குருநகர் புதிய சந்தை வர்த்தகர் சங்கம் நவீனசந்தை உள்புறத்தில் தொங்கவிட்டுள்ளது. [இ51]

## உறுப்பு எழுத்துப் போட்டி

அளவெட்டி, ஜூன் 10

அளவெட்டி மாணவர்களுக்கான உறுப்புஎழுத்துப் போட்டிஒன்று ஆரபி கலையகத்தினால் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

தமிழ் தமிழாக அழகோடு நிலைபெறவேண்டும் என்ற புனிதமான உள்ளத்துடன் இப் போட்டி நடத்தப்படவுள்ளது. (சி)

## தென்மராட்சியில் காணமற் போனோர்கைதானோர் பற்றிய விவரச்சேகரிப்பு

சாவகச்சேரி, ஜூன் 10

தென்மராட்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்கு உட்பட்ட பிரதேசத்தில் கைது செய்து காணமற் போனோர், கைதுசெய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளோர் பற்றிய சகல விவரங்களையும் சத்தியக் கடதாசி மூலம் அறியத் தரவும்.

இவ்வாறு தென்மராட்சி பிரஜைகள் குழுவின் செயலாளர் சட்டத்தரணி த. வேலாயுதம் தென்மராட்சி வாழ் மக்களைக் கேட்டுக் கொள்கிறார்.

காணமற்போனோர் பற்றி நடவடிக்கை எடுக்கவும் தடுப்புக் காவலில் உள்ளோரை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் இது உதவும் என்பதால் உடன் தொடர்பு கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார்.

செயலாளரை அவரது சாவகச்சேரி இல்லத்தில் சந்திக்க முடியாதவர்கள் தத்தம் பகுதி பிரஜைகள் குழுவின் பிரதிநிதியுடன் தொடர்பு கொள்ளலாம். (ஒ-31)

## பிள்ளைத் தமிழ் வளர்த்த பெரியார்

யாழ்ப்பாணம், ஜூன் 10

"பிள்ளைகளுக்காக தமிழ் வளர்த்த பெரியார் நவாலியூர் சோமசுந்தரப் புலவரை நாம் மறந்து விடமுடியாது."

இவ்வாறு நவாலி மகாவித்தியாலய இளைப்பாறிய அதிபர் செ. கதிர்காமத்தம்பி பாடசாலையில் தமக்களிக்கப்பட்ட பிரியாவிடையின் போது தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் "இப்பாடசாலையில் அவருக்காக விழாக் கொண்டாடினோம். எதிர்காலத்தில் தொடர்ந்தும் இப்பாடசாலையில் விழா எடுக்கவேண்டும்.

அத்துடன் வாழ்க்கை நெறியான திருக்குறள் மனனப் போட்டி வைத்து, மாணவர்களை நன்னெறிப்படுத்த வேண்டும்.

எனது இவ்விரு விருப்பங்களையும் இப்பாடசாலையினர் பூர்த்தி செய்ய விரும்புகிறேன்" என்றார். [சி 90]

## தையல் பயிற்சி

யாழ்ப்பாணம், ஜூன் 10

ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் தையல் பயிற்சி நடைபெற்று வருகிறது.

பயிற்சி பெறுபவர்களில் சித்தியடைபவர்களுக்கு மாத்திரம் சேவாச்சிரமம் தையல் மிஷின் வழங்கும். (ஆ-சி)

## கண்டெடுக்கப்பட்ட அடையாளக் கார்டுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 10

கண்டெடுக்கப்பட்ட அடையாள கார்ட்டுகள் உதயன் காரியாலயத்தில் பொதுமக்களால் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

உரியவர்கள் 292/2, நாவலர் வீதி உதயன் காரியாலயத்துக்கு நேரில் வந்து பெற்றுக் கொள்ள முடியும்.

301030487. V சங்கரன் வேலாயுதம் வண்ணார்பண்ணை

377542385 V சோதிப்பிள்ளை கணேசன், கோண்டாவில்.

392330305 V இராமநாதர் பாலசுப்பிரமணியம், கழிபுரம்.

346530308 V ஜெகதீஸ்வரி நடராசா சுதுமலை.

482932355 X சூசை மாணிக்கம், கோப்பாய்.

683321346 V ஜோசப் பத்திக் வாகின்றன் கிளே குருநகர்

388101148 V பூபதி கனகரத்தினம், இராமநாதபுரம்.

408630169V அன்னலட்சுமி பொன்னுத்துரை. சுதுமலை.

321720064V சோமலிங்கம்செல்லப்பா, தெல்லிப்பளை.

665591425V கலைவாணி நடராசா, நீர்வேலி வடக்கு.

### கடவுச் சீட்டு

கடவுச்சீட்டு இலக்கம் J0017556 ஐயம்பிள்ளை பாலகுமாரன்.

தற்காலிக அடையாள அட்டை பொன்கலர் அன்ரன் ரெஜி, புதுக்குடியிருப்பு.

தற்காலிக அடையாள அட்டை கு செல்வராசா, கைதடி.

தற்காலிக அடையாள அட்டை ஏ விசுவலிங்கம், திருநெல்வேலி.

தற்காலிக அடையாள அட்டை ர. தயாளினி, [illegible] (க இ-)

## திருமலையில் வெசாக் கலகலப்பு இல்லை

திருகோணமலை, ஜூன் 10

திருகோணமலையில் இம்முறை வெசாக் கலகலப்பு எதுவும் இடம் பெறவில்லை. கோட்டையினுள் அமைந்துள்ள பௌத்த ஆலயத்திலும் நகரின் மத்தியிலுள்ள ஆலயத்திலும், மிஹிந்தபுரவிலுள்ள ஆலயத்திலும் விசேட பூஜைகள் மாத்திரம் இடம்பெற்றன. நகரத்தில் வேறு எந்த இடத்திலும் எது விதமான பந்தல்களோ சமய நிகழ்ச்சிகளோ இடம்பெறவில்லை. (இ-150)

## பிறந்ததின வாழ்த்து



**செல்வன் அன்ரன் வேளாங்கரன்**

ஆக்லேன் உடுவிலைச் சேர்ந்த தேவராஜ், வனஜா தம்பதிகளின் அருமைச் செல்வன் வேளாங்கரன் இன்று 10-6-88 தனது இரண்டாவது பிறந்த தினத்தைக் கொண்டாடுகிறார். செல்வக் குஞ்சன் வல்லவனாய் மட்டுமல்ல நல்லவனாயும் சௌகரியத்துடனும் வாழ வாழ்த்தி அன்னை வேளாங்கன்னியின் அருள்வேண்டி நிற்கும் டடா, மம்மி, அப்பியா, அம்மம்மா, அப்பப்பா, [illegible], பெரியப்பா, பெரியம்மா, அன்புத் தங்கை சிந்துஜா, சித்தப்பாமார், [illegible]. 4121


பிரயாண ஒழுங்குகள்

☆ சவூதி அரேபியா
☆ குவைத்

Saudi Arabia Open Visa
Farmers
(25 வயதிற்கு மேற்பட்டவர்கள்)
சம்பளம் 500 + 100
ஒப்பந்தம் 3 வருடங்கள்
(10 நாட்களுக்குள் பயணம்)

☆ சவூதி அரேபியா
றெயில்வே கிளீனேர்ஸ்
பாடசாலை கிளீனேர்ஸ்
எயர்போர்ட் கிளீனேர்ஸ்
சம்பளம் 350 + 100
ஒப்பந்தம் 2 வருடங்கள்
சாரதி (H V Driver)
சம்பளம் 600 + 100
ஒப்பந்தம் 2 வருடங்கள்

☆ குவைத்
ஆஸ்பத்திரி கிளீனேர்ஸ்
இன்ரநாஷனல் கிளீனேர்ஸ்
சம்பளம் 30 K. D
ஒப்பந்தம் 2 வருடங்கள்

★ சவூதிக்கு போக கடவுச்சீட்டு தந்தவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

முற்பணம் அறவிடப்படமாட்டாது
● காரியாலயம் எல்லா நாட்களிலும் திறக்கப்படும்.

தொடர்பு:
கோல்டன் ரவல்ஸ் அன் ரூர்ஸ்
புகையிரதநிலைய வீதி,
சுன்னாகம்.

கிளை இல 1
கோல்டன் ரவல்ஸ் அன் ரூர்ஸ்
மயிலங்காடு,
ஏழாலை.
(C-5386)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## வின்ஸர் வெண்திரையில்

8-6-88 முதல் குதூகல ஆரம்பம்
10.30 2.30 5.30

பெற்று வளர்த்து ஆளாக்கிய பெற்றோர்களிற்கு கடைசி காலத்தில் உதவியாக இருப்பது யார்? குடும்ப பாசத்தை சித்தரிக்கும் குடும்பப்படம் குடும்பத்திலுள்ள அனைவரும் கட்டாயம் பார்க்க வேண்டிய படம்.

நடிப்புலக மேதை சிவாஜிகணேசன் நாட்டியபேரொளி பத்மினி
பாண்டியராஜன், சீதா, சுஜாதா,
இளவரசி பாண்டியன்
இவர்களுடன்
விசு
நடித்த

"தாய்க்கு ஒரு தாலாட்டு"

புதிய வெளியீடு
(சவர்) (4138)


## தூய ஒளி கேடய இறுதிப்போட்டி இன்று

குருநகர் ஜூன் 10 குருநகர் மண்டைதீவில் இருந்து கொண்டியங்கிய குருநகர் மீனவர்கள் முப்பத்தொரு பேரினதும் நினைவாக வழங்கப்படும் 'தூய ஒளி' வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டிகள் குருநகர் விளையாட்டரங்கில் நடைபெற்று வருகின்றன.

இறுதி ஆட்டத்திற்குத் தெரிவான இரு கோஷ்டிகளுக்கும் இடையிலான மோதல் இன்று 10 ஆம் திகதி மாலை குருநகர் விளையாட்டு அரங்கில் நடைபெறும்.

இப்போட்டியில் யாழ் 10கிறீன் பீல்ட் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து யாழ் - முஸ்லிம் விளையாட்டுக்கழகம் மோதும். (இ-51)

## உதவி அளிக்க கனேடிய பிரதிநிதி உறுதி

காங்கேசன்துறை, ஜூன் 10

யாழ். மாவட்டத்திலுள்ள அகதிகள், அநாதைகள், அங்கவீனர்கள் இல்லங்களுக்கு விஜயம் செய்து நேரில் பார்வையிட்ட கனடா அபிவிருத்தி நிதியத்தின் கொழும்புப் பிரதிநிதி டோன் ஈ. பிறவுண் நெல் இந்த இல்லங்களுக்கு உதவி செய்ய உறுதி அளித்தார்.

இந்து மாமன்றத்தின் அழைப்பின் பேரில் இங்கு வந்த மேற்படி பிரதிநிதி தெல்லிப்பழை, கைதடி, பருத்தித்துறை, திருநெல்வேலி, வதிரி மற்றும் இடங்களில் உள்ள அகதிகள், அநாதைகள், அங்கவீனர்கள் ஆதரவு இல்லங்களுக்கும் விஜயம் செய்தார். (இ-68)

## சாரணரின் தேசிய வேலை வாரம் 25 முதல்

கொழும்பு, ஜூன் 10

இலங்கைச் சாரணரின் தேசிய வேலைவாரம் இம்மாதம் 25 ஆம் திகதியே ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இம்மாதம் 15 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரை இவ்வாரம் நடத்தப்படும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. (ஒ-எ)

## ஒத்திகை என்கிறார் லலித்

கொழும்பு, ஜூன் 10

வரப்போகும் பொதுத் தேர்தலுக்கான ஒத்திகைதான் மாகாண சபைத் தேர்தல்.

தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி முன் கண்டவாறு தெரிவித்தார்.

பெந்தோட்டையில் நடந்த கூட்டத்தில் அமைச்சர் பேசினார்.

அப்போதே இதனைச் சொன்னார் அமைச்சர். (இ-எ)


# MACK TRAVELS

## ரெலெக்ஸ் சேவை

- வெளிநாட்டுடன் அவசரமாக Telex தந்தி மூலம் தொடர்பு கொள்ள வேண்டுமா? உடன் நாடுங்கள் எங்கள் சேவையை விமானம் மூலம் ஒழுங்கு செய்யப்படும்.
- உங்களுக்கு கொழும்பில் பணம் தேவையா? ஒரே நாளில் கொழும்பில் பெறலாம் எங்கள் கொழும்பு பிரதிநிதி:

திரு. Ali Akber JeevunJee
481 Prince of Wales Avenue
Colombo - 14
Tel Office 27245-6, 27238, 36763
Res. 586016

### Courier Service

- சிறு பொதிகள், கடிதங்கள் விமான மூலம் கொழும்பிற்கு கொண்டு செல்லப்படும்.
- முத்திரை ஒட்டிய கடிதங்கள் கொழும்பில் தபாலில் இடப்படும்.
- மரண அறிவித்தல்கள் வானொலி மூலம் அறிவிக்க ஒழுங்கு செய்யப்படும்.
- யாழ் - கொழும்பு விமான சேவை தினசரி நடைபெறுகின்றன.

# MACK TRAVELS

இல. 8, முதலாம் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(C 5406)


## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர் சின்னத்தம்பி சினனட்டியர் சிவசம்பு
(இளைப்பாறிய தபாலதிபர்)

தோற்றம் 15. 8. 1909 மறைவு 23. 5. 1987
திதி: 10-6-1988

எங்கள் உள்ளத்தில் என்றும் ஒளிவீசும் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

அருணோதயம்,
சங்கவேலி,
மானிப்பாய். [4392]

## மூன்றுமாதம் நினைவஞ்சலி



இ. யோகேஸ்வரன் (யோகி)
தொண்டமானாறு
(கிறிக் சப்பலில் கடமையாற்றியவர்)

தோற்றம் 1954.11.2 மறைவு:- 1988.03.10

அன்பின் தெய்வமே! எங்கள் குருகுலம் விளங்க வந்த தெய்வமே! உமது நினைவும் பாசமும் என்றும் நீங்காது உமது ஆத்மா சாந்தியடைய கடவுளை வேண்டிக் கொள்கிறோம்.

அம்மா, அப்பா, மனைவி,
பிள்ளைகள், அண்ணன்மார்,
தொண்டமானாறு தங்கை, அக்கா, மச்சான்மார்,
(4135) மாமி, சுற்றத்தார், நண்பர்கள்

## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம்: 16-6-1967
மறைவு: 23-5-1987
திதி: 10-6-88

அமரர்
பொன்னுத்துரை பாலேந்திரன்
(பாலன்)

அன்பிற்கோர் அணிகலனாய், பண்பிற்கோர் உறைவிடமாய் பல்லோர் இதயங்களிலும் பதிந்து விட்ட பாலா! உன் புன்முறுவல் பூத்த முகமெங்கே? நீர் எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டாயினும் எம் நெஞ்சங்களை விட்டுப் பிரியவில்லை.

உமது ஆன்மா இறைவன் திருவடியில் சாந்தி பெற வேண்டுமென கண்ணீர் பூக்களால் அர்ச்சிக்கின்றோம்.

இங்ஙனம்,
மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய். பெற்றோர், சகோதரர்கள், உறவினர்கள், நண்பர்கள். (4141)

## ஓராண்டு நினைவு அஞ்சலி



தோற்றம் 21-04-1916
மறைவு 23-05-1987
திதி 10-06-1988

திருமதி செல்லமுத்தாச்சி ஆறுமுகம்

இலகத் தொளி விளக்காய்
எமக்கு வழி காட்டி
நல்லன எனு மெல்லாம்
நாம் பெறவே செய்திட்ட
அன்பு நிறை தாயாரவர்
ஆத்மாவின் சாந்திக்காய்
துன்ப மகற்றும்
தாயவனின் தாள் பணிந்தோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
சங்கரத்தை,
வட்டுக்கோட்டை. [4120]


## யாழ். நகர் மக்களுக்கு
### ஓர் மகிழ்ச்சிகரமான செய்தி

சகலவிதமான றேடியோ, ரீ.வி டெக் ஆகியவற்றின் உதிரிப்பாகங்களும் விடியோ ஷெட், I C, Transistor, Antena, Booster ஆகியவற்றை நம்பிக்கையாகவும் மலிவாகவும் பெற்றுக்கொள்ள நீங்கள் நாட வேண்டிய ஒரே ஸ்தாபனம்:

ஆர், வி சென்டர்
F6. நவீனசந்தை மேல்மாடி
யாழ்ப்பாணம்

(C 5408)


கமநல சேவைகள் திணைக்களம் - கிளிநொச்சி மாவட்டம்

## கேள்வி கோரும் அறிவித்தல்

கிளிநொச்சி மாவட்ட கமநல சேவைகள் உதவி ஆணையாளரினால் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து பின்வரும் வேலைகளுக்கான கேள்விகள் 1988/06/16 ஆம் திகதி காலை 10.00 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும். தேவைப்படும் தரவுகளைக் கீழே காண்க:-

| வேலை விபரம் | | தேவைப்படும் பதிவுத்தொகை | மீளப்பெறக்கூடிய வைப்புப்பணம் | மீளப்பெறமுடியாத கொடுப்பனவு |
|---|---|---|---|---|
| கனகபுரம் குளம் | - கனகபுரம், கிளிநொச்சி | - 1, 00, 000/- | 200/- | 25/- |
| காட்டுக்குளம் | - தட்டுவான்கொட்டி | - 1, 00, 000/- | 200/- | 25/- |
| கட்டுக்குளம் | - தட்டுவான்கொட்டி | - 1, 00, 000/- | 200/- | 25/- |
| உருத்திரபுரம் குளம் | - உருத்திரபுரம் | - 1, 00, 000/- | 200/- | 25/- |
| தட்சடம்பன் குளம் | - புளியம்பொக்கணை | - 1, 00, 000/- | 200/- | 25/- |
| இராமநாதபுரம் குளம் | - இராமநாதபுரம் | - 1, 00, 000/- | 200/- | 25/- |
| முகாவில் குளம் | - முகாவில், பளை | - 1, 00, 000/- | 200/- | 25/- |
| சுருவில் குளம் | - முகாவில், பளை | - 1, 00, 000/- | 200/- | 25/- |

கேள்விப்படிவங்களை, மீளப்பெறக்கூடியதும், மீளப்பெறமுடியாததுமான தொகைகளைச் செலுத்தி 1988/06/16 ஆம் திகதி காலை 10.00 மணி வரை இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். மேலதிக விபரங்களை அலுவலக நாட்களில் அலுவலக நேரங்களில் எங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளமுடியும்.

வே. முருகையா
உதவி ஆணையாளர்,
கிளிநொச்சி மாவட்ட கமநல சேவைகள் திணைக்களம்,
பரந்தன்,
27.5.88

(கி 5404)


## அரிய சந்தர்ப்பம்

நெல்லியடியில்
கம்பியூட்டர் கல்வி
# Computer Programming
BASIC LANGUAGE
O/L படித்த அனைவரும் சேரலாம்.

புதிய வகுப்புக்கள்
ஆரம்பம்: 15—6—1988

தமிழ்மொழி பெயர்ப்புக்கள் வழங்கப்படும்.
மிகச் சிறந்த கம்பியூட்டர்களில்
செய்முறைப் பயிற்சி அளிக்கப்படும்.
வெளிநாடுகளில் கம்பியூட்டர்களில் வேலை செய்யும் முறைகள் விளக்கமாக கற்பிக்கப்படும்.
அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.
நேரில் வரவும்:

" கெயின்ஸ் "
நெல்லியடி.

(C 5396)


## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



ஆறுமுகம் குணநாயகம் B.A
(S. L. A. S)
(உதவி அரசாங்க அதிபர் வவுனியா)

ஆண்டவன் படைப்பு 24. 4. 1944 அரக்கன் பறிப்பு 15. 5. 1985
திதி: 10. 6. 1988

அன்பின் திருவுருவாய் பண்பின் சிகரமாய், பாசத்தின் உறைவிடமாய், குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்து எம் நெஞ்சம் எல்லாம் நிறைந்திருந்த எங்கள் அன்புத் தெய்வமே, நீங்கள் மறைந்து மூன்று ஆண்டுகள் ஆகியும் உங்கள் நினைவு என்றும் எங்கள் மனதைவிட்டு அகலப் போவதில்லை. உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

தங்கள் பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி, அருமை மகன், மகள் மற்றும் பெற்றோர், சகோதரர்கள், சகோதரிகள், மைத்துனர்கள், மைத்துனிகள், மாமன்மார், மாமிமார், பெருமக்கள், மருமக்கள், உற்றார், உறவினர், நண்பர்கள்.

"சரவணை மேற்கு"
"வேலணை" (4117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

குறள்:
வினையால் வினையாக்கிக் கோடல் நனைகவுள்
யானையால் யானையாத் தற்று

பொருள்:
ஒரு செயலைச் செய்யும்போது அச்செயலால் மற்றொரு செயலையும் செய்து முடித்துக் கொள்ளல், ஒரு யானையால் மற்றொரு யானையை பிடித்தலைப் போன்றது.


உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை
இல:-398/நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம் 23078
10-06-1958 த.பெ. இல 68


## ஈழத் தமிழர் மனம்

வடக்கு, கிழக்கில் நிலைகொண்டுள்ள இந்திய அமைதிப்படையினர் உடனடியாக யுத்த நிறுத்தம் செய்ய வேண்டும்.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தை அமுல் செய்வதில், அதனை ஏற்றுக் கொள்வதில், அதில் செய்யப்பட வேண்டிய சில திருத்தங்களை வகுப்பதில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு உள்ள கருத்து வேறுபாடுகளைக் களைவதற்கு இருசாராரும் பேச்சுவார்த்தை நடத்தி ஓர் இணக்கத்துக்கு வரவேண்டும்.

அதாவது தமிழர் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும், அவர்கள் நலன்களைப் பாதுகாக்க வேண்டும், அவர்களது உரிமைகளை 'அசையாமுகி' ஸ்ரீலங்கா அரசாங்கத்திடம் இருந்து பெற்றுக்கொடுக்க வேண்டும் என்ற இதய சுத்தியுடன் இந்தியா பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்.

ஈழத் தமிழர் பிரச்சினை சம்பந்தமாக, ஈழத் தமிழ் மக்களின் இன்றைய நிலைப்பாடு இதுதான். யுத்த நிறுத்தம் மூலம் பேச்சுவார்த்தை; பேச்சுவார்த்தை மூலம் இணக்க நிலை; இணக்க நிலை மூலம் தீர்வு; தீர்வு மூலம் அமைதி. அமைதியும் சமாதானமும் நிலவினால் மட்டுமே பாதுகாப்பானதும், நிச்சயமானதுமான ஒரு வாழ்க்கை நிலை உருவாகும். அப்போது தான் நீண்டகாலத்திற்குப் பின்னராவது நிம்மதியைக் காணமுடியும். உரிமைகளை அனுபவிக்க முடியும். இதுவே ஈழத் தமிழ் மக்களின் இன்றைய எண்ணக் கிடக்கை.

அதனை வெளிப்படுத்தும் நிலைக்கு ஈழத் தமிழர்கள் இப்போது முன் வந்திருக்கிறார்கள்.

1. இவ்வாரத்தில் சுன்னாகத்தில் நடந்த வீதி மறிப்புப் போராட்டம்; அதில் கலந்து கொண்ட மக்களின் எண்ணிக்கை.
2. யுத்த நிறுத்தம் அறிவிக்கப்படும் வரை, அமைதிப்படையினர் நடத்தும் மாநாடுகள், கலந்துரையாடல்களில் பங்கு பற்றாது பகிஷ்கரிப்பது என்ற பிரசைகள் குழுக்களின் இணைப்புக் கமிட்டியின் முடிவு.

இன்றைய சூழ்நிலையில், நாடாளுமன்றப் பிரதிநிதித்துவமோ, வேறெந்தப் பிரதிநிதித்துவமோ இல்லாத, தமிழ் மக்களின் கஷ்டங்களை, துன்பங்களை எடுத்துச் சொல்லி நிவாரணம் பெற முயற்சி செய்யும் அமைப்புகளாக விளங்குபவை பிரசைகள் குழுக்களே. அவற்றின் கருத்தும், குரலும் தமிழ் மக்கள் குரலாகக் கணிக்கப்பட வேண்டியவை.

மொத்தத்தில் யுத்த நிறுத்தம், பேச்சுவார்த்தை என்ற மந்திரமே ஒன்றைய குரலாக ஒலிக்க தமிழ் மக்கள் துணிந்து வருகிறார்கள் என்பதை அவதானிக்க முடிகிறது. மேலே தெரிவிக்கப்பட்ட 1-உம், 2-உம் அதனையே எடுத்துக் காட்டுகின்றன.

தமது கருத்தைத் தம்மோடு வைத்திருக்காமல், அதனைக் கூட்டாகச் சேர்ந்து அஹிம்சை வழியில் வெளிப்படுத்தினாலாவது இந்திய அரசு தங்கள் எண்ணக்கிடக்கையை, எதிர்பார்ப்பைப் புரிந்துகொள்கிறதா என்று பரீட்சிப்பதற்குத் தமிழ்மக்கள் மெதுவாக ஆரம்பித்திருக்கிறார்கள். மெதுவான ஆரம்பம் உரிய பரிமாணத்தைப் பெறும்போதாவது இந்தியா புரிந்து கொள்கிறதா, உணர்கிறதா என்று பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

இந்தியா ஒரு சனநாயக நாடு சனநாயகத்துக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் நாடு என்றும் சொல்லப்படுவதும் உண்டு.

ஈழத்தமிழரின் எண்ணத்தை, மனத்தைப் புரிந்துகொண்டு, சனநாயகத்துக்கு அது மதிப்பளிக்கின்றதா என்பதையும் விரைவில் பார்த்துவிடலாம்.

யுத்த நிறுத்தம், பேச்சுவார்த்தை, இணக்கம், தீர்வு என்ற படிக்கட்டுகளில் ஏறி ஈழத் தமிழ்மக்களுக்கு உதவவேண்டும் என்ற கருத்து தமிழகத்திலும் வலுத்து வருவது நல்ல சகுனம் என நம்பலாம்.

தமிழகத் தலைவர்கள் கருணாநிதி, ஜெயலலிதா, ஜானகி, நெடுமாறன், வீரமணி ஆகிய சகலரும் இந்த நிலைப்பாட்டையே வெளிப்படுத்தி உள்ளனர். இந்திரா காங்கிரஸ் மூப்பனாரைத் தவிர! ஏன் பிரதான எதிர்க்கட்சியான தெலுங்குதேசக் கட்சி உட்பட அகில இந்திய மட்டத்திலான எதிர்க் கட்சிகளில் பலவும் இந்தக் கருத்தையே கொண்டிருக்கின்றன.

ஈழத் தமிழ் மக்கள் தமது எண்ணத்தை வெளியிடும் நடவடிக்கைகளின் பரிமாணம் அதிகரித்தால், இந்திய அரசுக்கான அழுத்தங்களை அதிகரித்தால், விரும்பும் விளைவு வந்துசேரலாம்.

ஆப்கனில்

# பத்தாண்டு கால யுத்தத்தில் 2½ லட்சம் பேர் உயிரிழந்தனர்!

## அவர்களில் 50ஆயிரம் பேர் பெண்கள், குழந்தைகள்

ஐ. நா, ஜூன் 9

கடந்த பத்தாண்டுகள் ஆப்கானிஸ்தானில் நடந்த யுத்தத்தில் 2½ லட்சம் பேர் உயிரிழந்தனர்.

இவர்களில் 50 ஆயிரம் பேர் வரையில் பெண்கள் குழந்தைகள் ஆவர்.

உயிரிழந்தவர்களில் பொது மக்களும் ஆப்கான் துருப்புக்களும் அடங்குவர்.

இத்தகவல்களை ஆப்கன் அரசுத்தலைவர் டாக்டர் நஜிபுல்லா கடந்த வியாழன் ஐ. நா பொதுச் சபைக் கூட்டத்தில் வெளியிட்டார்.

டாக்டர் நஜிப் மேலும் சொன்னதாவது;

ஆப்கனிஸ்தானில் இருந்து 34 ஆயிரம் சோவியத் துருப்புகள் தாயகம் திரும்பிவிட்டன.

ஆப்கனில் உள்ள சோவியத் துருப்புகளில் நான்கில் ஒருபகுதியினர் வாபஸ் கிவிட்டனர்.

ஜெனிவா உடன்பாட்டை மீறும் நடவடிக்கைகளில்தான் பாகிஸ்தான் ஈடுபட்டுள்ளது.

இப்படி டாக்டர் நஜிப் தெரிவித்தார்.

இதனிடையில் ஆப்கன் தென்பகுதியில் இருந்து சோவியத் துருப்புக்கள் விலகுவது தாமதப்படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

கெரில்லாக்கள் ஆப்கன் அரசுத் துருப்புக்கள் மீது நடத்திய பெரும் தாக்குதலைத் தொடர்ந்தே, இத்தாமதம் என்று சொல்லப்படுகின்றது.

இத்தாக்குதலில் அரசுத் துருப்புகளுக்குப் பெரும் சேதம் ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை ஆப்கன் கிளர்ச்சியில் உயிரிழந்தவர் எண்ணிக்கை, ஆப்கன் அதிபர் வெளியிட்டதிலும் பார்க்க பல மடங்கு அதிகம் என்று பி.பி.சி அறிவித்தது.

குறைந்தது பத்து லட்சம் பேர் உயிரிழந்திருக்கலாம் என்று இஸ்லாமாபாத்தில் இருந்து பீ. பீ. சி. செய்தியாளர் தெரிவித்தார். [எ]

# பிஜி நிலைமை மோசமடைகிறது!

பிஜியில் வாழும் இந்திய வம்சாவளியினர் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட முயற்சிப்பது பழங்குடியினருக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தி இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

ஆயுதக் கிளர்ச்சியை நடத்துவதற்காக சேகரித்து பதுக்கி வைக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படும் ஆயுதங்கள் பிஜியின் பல பகுதிகளில் பொலீஸாரினால் கைப்பற்றப்பட்டன என்பது தெரிந்ததே. எந்தக் கிளர்ச்சியையும் சமாளிக்க பழங்குடியினர் தயாராக உள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதைத் தொடர்ந்தே இந்தநிலை உருவாகி இருப்பதாகச் சொல்லப்படுகிறது. [எ]

# மதுரையில் நில நடுக்கம்

சென்னை, ஜூன், 9

தமிழ் நாட்டில் மதுரை மாவட்டத்தில் சில பகுதிகளில் 24 தடவை இலேசான நில நடுக்கம் ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

போடிநாயக்கானூரில் மண்வீடு ஒன்று சரிந்து விழுந்தது ஒருவர் காயமடைந்தார்.

இன்னொரு சம்பவத்தில் மோவபட்டில் சென்று கொண்டு இருந்த பெண் ஒருவர் தூக்கி எறியப்பட்டார். தலையில் அவருக்குக் காயம் ஏற்பட்டது (எ)

வெளி உலகில்

# உழுபவனுக்கே நிலம் சொந்தம்! பிலிப்பீன்ஸ் அரசு சட்டம் இயற்றியது

மணிலா, ஜூன் 9

நிலச் சீர்திருத்தச் சட்டம் ஒன்றை பிலிப்பீன்ஸ் நாடாளுமன்றம் அங்கீகரித்து விட்டது.

இச்சட்டத்தின்படி சுமார் 20 லட்சம் குத்தகை விவசாயிகளுக்கு, செய்கை பண்ணப்படும் நிலம் சொந்தமாகிறது.

பிலிப்பீன்ஸ் ஜனாதிபதி திருமதி கொரஸோன் அக்கினோ புதிய சட்டத்தை வரவேற்றிருக்கின்றார்.

விவசாய அபிவிருத்திக்கு உதவும் நாடுகள் இப்படியான நிலச்சீர்திருத்தச் சட்டம் ஒன்றை பிலிப்பீன்ஸ் கொண்டு வர வேண்டும் என்று எதிர்பார்த்தன. (எ)

## சுதந்திர பலஸ்தீனம் என்பது முடியாத காரியம்

டமஸ்கஸ் ஜூன் 9

இஸ்ரவேலினால் கைப்பற்றப்பட்ட காஸா, மேற்குக் கரையோரப் பகுதிகளில் சுதந்திர பலஸ்தீன நாட்டை அமைப்பது என்பது முடியாத காரியம்.

இப்படி அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோர்ஜ் ஷூல்ட்ஸ் தெரிவித்தார்.

மத்திய கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காணு முகமாக அமெரிக்க அமைச்சர் ஷூல்ட்ஸ் எகிப்து, இஸ்ரவேல் நாடுகளுக்கு விஜயம் செய்துவிட்டு சிரியா சென்றார்.

அதன் பின்னர் அவர் செய்தியாளரிடம் சொன்னதாவது;

கைப்பற்றப்பட்ட பிரதேசங்களில் சுதந்திர பலஸ்தீனம் ஒன்றை அமைப்பது செயல்படுத்த முடியாத திட்டமாகும்.

இப்பிரதேசங்களை ஒரு நாட்டுடனோ, அல்லது நாடுகளுடனோ சமஷ்டி அமைப்பில் சேர்க்கவேண்டும் என்பதே அமெரிக்காவின் கொள்கை.

இப்படி அமைச்சர் ஷூல்ட்ஸ் தெரிவித்தார்.

## சோல் ஒலிம்பிக்ஸ்

சோல், ஜூன், 9

சோலில் நடைபெறும் ஒலிம்பிக்ஸ் விளையாட்டுப் போட்டியை குழப்பக் கூடாது என்று அமெரிக்கப்பாதுகாப்பு அமைச்சர் பிராங்க் கருலுசி வடகொரியாவை எச்சரித்திருக்கிறார்.

தென் கொரியத் தலைநகர் சோலில் எதிர்வரும் செப்ரெம்பரில் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ளன

## பங்களாதேஷில் எதிர்ப்பு இயக்கம்

டாக்கா, ஜூன், 9

பங்களாதேஷில் எட்டு அரசியல் கட்சிகள் கூட்டணி எதிர்ப்பு இயக்கம் ஒன்றை இன்று வியாழக்கிழமை ஆரம்பித்தது.

இஸ்லாத்தை அரச மதமாகப் பிரகடனப் படுத்தப்பட்டதை எதிர்த்தே இந்த இயக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டது.

இஸ்லாம் அரச மதமாகப் பிரகடனப்படுத்தப்பட்டதை ஆட்சேபித்துச் சட்டத்தரணிகள் பங்களாதேஷ் உயர் நீதிமன்றத்தைப் பகிஷ்கரித்தனர்.

டாக்கா பல்கலைக் கழக மாணவர் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தினர்.

பேரணி, அரசுத் தலைமைச் செயலகத்தை நோக்கிச் சென்றது.

அரசுக் கட்டடங்கள், பஸ்கள் முதலியன சேதமாக்கப்பட்டன என்று அறிவிக்கப்பட்டது.

பேரணியை 16 மாணவர் மன்றங்கள் ஒழுங்கு செய்திருந்தன.

மாணவரும், பொலீஸாரும் மோதிக்கொண்டனர் அப்போது 30க்கு மேற்பட்டோர் காயமடைந்தனர் என்று அறிவிக்கப்படுகிறது

இஸ்லாம் அரச மதம் என்ற சட்டம் அமுல் செய்யப்படுவதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று எதிர்க்கட்சிகள், மாணவர் அமைப்புக்கள் பொதுமக்களைக் கேட்டுள்ளன. (எ)

## ஜனநாயக வேட்பாளர் டுகாகிஸ்

வாஷிங்டன், ஜூன் 9

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் நியமனத்தை திரு. மைக்கல் டுகாகிஸ் பெற்றிருக்கிறார்.

கடந்த வாரம் நடந்த நான்கு பூர்வாங்கத் தேர்தல்களிலவண பிதா ஜெஸி ஜாக்ஸனிலும் பார்க்க கூடுதல் பிரதிநிதிகளின் ஆதரவை அவர் பெற்றார் என்று அறிவிக்கப்பட்டது.

சொறி, சிரங்கு வேகமாகப் பரவுகிறது

# பாதிக்கப்பட்டோருக்கு

## வீடு வீடாகச் சென்று மருத்துவ உதவி

கோப்பாய், ஜூன் 10

உரும்பராய் கிழக்கு, செல்வபுரம் ஆகிய பகுதிகளில் சொறி சிரங்கு என்பவற்றினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடு வீடாகச் சென்று மருத்துவ உதவிகள் வழங்கப்பட உள்ளன.

கோப்பாய் பகுதி சுகாதார வைத்திய அதிகாரியின் ஆலோசனையின் பேரில் நீர்வேலி பொதுச் சுகாதாரப் பரிசோதகரும், உரும்பராய் மத்திய வைத்திய பரிசோதக அதிகாரியும் இணைந்து மருத்துவ உதவிகள் வழங்க உள்ளனர்.

கொக்குவில் பகுதியிலும் வைத்திய அதிகாரிகளின் உதவியுடன் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட உள்ளது

இது சம்பந்தமான ஆலோசனைகளைப் பெற விரும்புவோர் அவ்வப் பகுதி குடும்பநல சேவையாளருடன் அல்லது பொது சுகாதார பரிசோதகருடன் தொடர்பு கொள்ளும்படி கோப்பாய்ப் பகுதி சுகாதார வைத்திய அதிகாரி கோருகிறார். (இ-72)

பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு

## முத்திரையிடப்பட்ட இறைச்சியையே விற்கிறோம்

### சங்கச் செயலாளர் அறிக்கை

குருநகர், ஜூன் 10

"யாழ்-மாவட்டத்தில் இயங்கி வரும் உத்தரவு பெற்ற ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சிக் கடைகளில் சுகாதார பரிசோதகர்களின் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு வைத்திய அதிகாரியால் முத்திரை இடப்பட்ட இறைச்சி வகைகளையே விற்பனை செய்து வருகிறோம்."

யாழ் — மாவட்ட இறைச்சிக் கடை வியாபாரிகள் சங்கச் செயலாளர் திரு க. சி. கிருஷ்ணன் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையில் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

"சமீபத்தில் கிழக்கு மாகாணத்திலும், மதவாச்சி, வவுனியா, ஒட்டுசுட்டான், ஒல்மடு, புளியங்குளம், ஓமந்தை, ஈரப்பெரியகுளம், செட்டிகுளம் பகுதிகளிலும் கால்நடைகளில் பரவியுள்ள 'கோமாரி நோய்' சம்பந்தமான செய்தியை அடுத்து குடாநாட்டு மக்கள் பலர் இறைச்சியை உண்ணத் தயங்குகின்றனர்.

சட்ட விரோத 'மினி' இறைச்சிக் கடைகளை பகிஷ்கரித்து அங்கீகாரம் பெற்ற இறைச்சிக் கடைகளில் பொது மக்கள் தமது தேவைகளை பூர்த்தி செய்வதன் மூலம் மேற்படி நோய் சம்பந்தமான சந்தேகங்களுக்கு இடம் தராமல் இருக்க முடியும்.

இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ-51]

## இரவு நேர சோதனை

குருநகர், ஜூன். 10

இந்திய அமைதி காக்கும் படையினர் இரவு நேரச் சோதனைகளிலும் இப்பொழுது ஈடுபட்டு வருகின்றனர்

செவ்வாயன்று இரவு ஏழு மணியில் இருந்து எட்டு மணி வரை ஒட்டுமடம் சந்தியில் வீதிச் சோதனையில் நூற்றுக்கணக்கான அமைதிப் படையினர் ஈடுபட்டிருந்தனர். (இ 51)

## 32ஆவது ஆண்டு விழா

திருநெல்வேலி கலாமன்ற சனசமூக நிலைய இந்து சமய அபிவிருத்திச் சங்கத்தின் 32ஆவது ஆண்டுவிழா இன்று வெள்ளிக்கிழமை நடைபெறுகிறது

பிற்பகல் ஐந்து மணி அளவில் சமயத்துறைத் தலைவர் திரு. க. பரமநாதன் (யாழ் முத்துத்தம்பி மகாவித்தியாலய ஆசிரியர்) தலைமையில விழா கலாமன்ற மண்டபத்தில் நடைபெறும்.

## சீருடை அன்பளிப்பு

பரந்தன் — கிளிநொச்சியை எம். சி. ஏ அமைப்பினால் கோவில் வயல் சீ. சீ. த. க. பாடசாலையிலுள்ள ஏழை மாணவர்கள் ஐம்பது பேருக்கு. பாடசாலைச் சீருடைகள் இலவசமாக வழங்கப்பட்டன

[illegible] திரு. பொன் இல்லைநாயகம் மாணவர்களுக்கு வழங்கினர்.

## அந்த மாவட்டத்தில் வாகனங்களுக்கு பாஸ் தேவையில்லை

கிளிநொச்சி, ஜூன் 10

கிளிநொச்சிமாவட்டக் கச்சேரியில் வைத்து பாகனங்களுக்கு வாகன அனுமதிகள (பாஸ்) வழங்கப்படுவது இவ்வார முதல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது வாகனங்களுக்கு அனுமதிப் பத்திரம் தேவையில்லை என கிளிநொச்சி இந்திய இராணுவ அதிகாரிகள் சரப்பினரால் கிளிநொச்சிகச்சேரிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது

ஆனால் கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பாஸ் இல்லாது வரும் வாகனங்கள் ஆனையிறவிலுள்ள தடைமுகாமில் வைத்து திருப்பி விடப்படுகின்றனவாம்.

இவ்வாறு திருப்பி விடப்பட்ட வாகனங்கள் சில பாஸ் வழங்கக்கோரி நேற்று கிளிநொச்சி கச்சேரிக்கு வந்துசேர்ந்தன

இதுதொடர்பாக கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ளவுள்ளார் [இ-76]

## ஆய்வரங்கு

யாழ்ப்பாணம் ஜூன் 10

பேராசிரியர் கைலாசபதியின் ஐந்தாவது ஆண்டு நினைவாக தேசிய கலை இலக்கியப் பேரவை நடத்தி வரும் ஆய்வரங்குத் தொடரின் இரண்டாவது ஆய்வரங்கு எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிறு காலை 9 மணிக்கு நடைபெறும்

யாழ் சிறும்பியடியில் அமைந்துள்ள மணியம் கட்டடத்தில் உள்ள கூட்டுறவுச் சங்க சமாஜ மண்டபத்தில் ஆய்வரங்கு நடைபெறும்.

கலாநிதி பார்வதி கந்தசாமி 'பாரதி' ஆய்வில் கைலாசபதி என்னும் தலைப்பில் ஆய்வுக் கட்டுரை சமர்ப்பிப்பார் ஆய்வரங்குக்கு கவிஞர் இ. முருகையன் தலைமை வகிப்பார். (இ)

# கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் புனரமைப்பு பூர்த்தி நிலையில்

## 17 ஆம் திகதி கும்பாபிஷேகம்

கிளிநொச்சி, ஜூன் 10

1986 ஆம் ஆண்டு கிளிநொச்சியில் நடைபெற்ற அசம்பாவிதங்களால் சேதம் அடைந்திருந்த அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம் புனரமைப்புச் செய்யப்பட்டு மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 17 ஆம் திகதி நடைபெற இருக்கிறது

இந்த ஆலயம் சேதம் அடைந்த நிலையில் பலமாதங்கள் பூசையின்றி பூட்டப்பட்டிருந்தது நிலைமை ஓரளவு சீரடைந்து வருவதால் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு நித்திய பூசைகள் ஆரம்பிக்கப்பட்டன

புனரமைப்பு வேலைகளும் மேற்கொள்ளப்பட்டன.

வேலைகள் யாவற்றையும் பூர்த்தி செய்து பூரணமாகத்தவதற்கு ரூபா 15 லட்சத்திற்கு மேல் மதிப்பிடப்பட்டிருந்தது.

இந்த வேலைகளின் ஆரம்ப கட்டத்தில் ஆலயத்திற்கு ஏற்பட்ட சேதத்தைத் திருத்துவதற்கு புனர்வாழ்வு அமைச்சு சுமார் ஒரு லட்சத்து மூவாயிரம் ரூபாவை கொடுத்து உதவி இருந்தது

இதனை விட கிளிநொச்சியிலுள்ள வர்த்தகப் பெருமக்கள், விவசாயப் பெருமக்கள் ஆகியோர் மனமுவந்து பல லட்சம் ரூபா செலவு செய்து திருப்பணிகளை நிறைவேற்றி வருகின்றனர். (இ76)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org





# உதயன்

10 - 06 - 1988 வெள்ளிக்கிழமை



● மிளகாய்த் தூள்
✶ மஞ்சள் தூள்
வீட்டுப் பாவனைக்குரிய முறையில் தயாரிக்கப்பட்டது.
பாவனையாளர், மொத்த விற்பனையாளர்களுக்கு விசேஷ கழிவுண்டு
அண்ணு தொழிலகம்
இணுவில்.



சரஸ்வதி நிலையம்
சித்தனகேணிச் சந்தி பிள்ளையார் கோவில், மேற்கு வீதி.
பிரபல பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் நடாத்தும்
**G. A. Q. தொடக்கத்திலிருந்து ஆங்கில வகுப்புகள்**
இம்மாதம் 12ந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி
க. கயிலாயநாதன், முதல்வர்
[4387]


## நித்யாவின் 1-வது பிறந்ததின வாழ்த்து



நித்யா
செந்தமிழ் நாட்டின் தேன் தமிழ்
நித்யா – நீ
மாபெரும் சபையினிலே வெற்றி நடை
போடும் வீராங்கனையாக
கற்றவர் முன்னிலையில், கைதட்டல்
மத்தியில்
பொற்பதக்கம் சூடி வரும் பொன்னாள்
வருக என வாழ்த்துகின்றார்கள்.

அப்பா அம்மா
உற்றார். உறவினர்கள்
4145)

## கோயா தாங்களுக்கு ஜனாஸா தொழுகை

யாழ்ப்பாணம், ஜூன் 10

கொழும்பு, நிபாய் தரீக் சங்கம், வெலிகாமம் நிபாய் தரீக் சங்கம், சிங்கப்பூர் நிபாய் தரீக் சங்கம், குவைத் நிபாய் தரீக் சங்கம் ஆகியவைகளின் ஆயுள்காலப் போஷகரான சங்கைக்குரிய நிபாய் மௌலானா அல்ஹாஜ் பி. பி யூசுப் கோயா தாங்கள் கடந்த சனிக்கிழமை கொழும்பு முகத்துவாரம் பள்ளித்தெரு, முஹ்பதீன் பள்ளிவாயலில் காலமானார்.

அன்னாரின் ஜனாஸா சென்ற ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் கொழும்பில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

அன்னாரின் பெயரில் யாழ்ப்பாணம் பெரிய பள்ளிவாயலில் நேற்று வியாழக்கிழமை மஃரிப் தொழுகையின் பின் யாஸீன் சூறவும் ஓதப்பட்டு, குர்ஆன் தமாமும் செய்யப்பட்டது.

இன்று வெள்ளிக்கிழமை ஜும்ஆத் தொழுகையின் பின் ஜனாஸாத் தொழுகையும் நிறைவேற்றப்படும்.

மேற்படி வைபவத்தில் வெலிகாமம், கப்புவத்தை நிபாய் தரீக் சங்கத்தின் தலைவர் ஜனாப் எம். எம் பாரிஸ் டாஹிம் கலந்து கொள்வார் (ஓ)

களவுபோன

## 13 சைக்கிள்கள் குருநகரில் மீட்பு

குருநகர், ஜூன் 10

பதின்மூன்று திருட்டுச் சைக்கிள்கள் குருநகர் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இச் சைக்கிள்கள் குருநகரில் அல்லாமல் வேறு பகுதிகளில் திருடப்பட்டவைகளாக இருக்கலாமென்று சந்தேகிக்கப்படுகிறது.

குருநகரைச் சேர்ந்த பிரமுகர்கள் குழுவொன்று பங்குத்தந்தை தலைமையில் நடத்திவரும் தீவிர தேடுதல் நடவடிக்கையில் மேலும் சைக்கிள்கள் அகப்படலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதுவரை அகப்பட்டுள்ள 13 சைக்கிள்களது விபரங்கள் வருமாறு:-

றலி - 2, ஈஸ்ரன் 2, ஹெரலி 1, ஹிரோ 2, ஏசியா - 3, ஹம்பர்-1, பிலீப்ஸ் பிஜன் 1, கொனிக்ஸ் - லேடிஸ் சைக்கிள் 1

சைக்கிள் களைப் பறிகொடுத்தவர்கள் குருநகர் புனித யாகப்பர் ஆலய பங்கில் வைக்கப்பட்டுள்ள இடத்தில் பார்வையிட்டு தகுந்த ஆதாரங்களைக் காட்டிப் பெற்றுக்கொள்ளலாமென்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-51)

## பாமகுடம் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 10

கவிஞர் தேவதாசனின் 'பாமகுடம்' நூல் வெளியீட்டு வைபவம் இன்று வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய பங்கு மண்டபத்தில் நடைபெறும்.

திரு. எவ் செபஸ்தியாம்பிள்ளை தலைமையில் நடைபெறும் இவ்வைபவத்தை வண பிதா ஜே ஏ பிரான்சிஸ் அடிகள் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்துவைப்பார்

யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் திரு. எஸ் சிவலிங்கராஜா அறிமுகவுரை நிகழ்த்துவார் மற்றும் பலரும் கருத்துரை வழங்குவர். [ஒ-5]

## தமிழ் விழா

யாழ்ப்பாணம் ஜூன் 10

யாழ் இந்துக் கல்லூரி தமிழ்ச் சங்கம் நடத்தும் ''தமிழ் விழா - 1988'' நாளை 11 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ் இந்துக் கல்லூரி, குமாரசாமி மண்டபத்தில் இடம்பெறும் இவ்விழாவுக்கு செலவன் சா. ஜெயப்பிரகாஷ் தலைமை வகிப்பார்.

விழாவில் ''திருக்குறளில் நெஞ்சும் நஞ்சும்'' என்பது பற்றிய சிறப்புச் சொற்பொழிவை புலவர் ஈழத்துச் சிவானந்தன் ஆற்றுவார்.

திரு இ. ஜெயராஜ் தலைமையில் ''தமிழ்ச் சினிமாப் பாடல்கள் இலக்கியத் தரம் வாய்ந்தவை'' என்பது பற்றிய பட்டி மண்டபம் நடைபெறும்.

''கூத்து வைத்தியம்'' என்ற நாடகம் யாழ் இந்துக் கல்லூரி மாணவர்களால் நடத்தப்படும்.

பிரதம விருந்தினர் கவிஞர் இ.முருகையனும் உரை ஆற்றுவார் [ஒ - சி]


மானிப்பாய் இந்துக் கல்லூரி
**பழைய மாணவர் சங்கம்**

வருடாந்தப் பொதுக்கூட்டம் 16/ 7/ 88 சனிக்கிழமை பி. ப. 3 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் என பழைய மாணவருக்கு அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது. சங்க யாப்பின்படி தலைவர், செயலாளர், பொருளாளர் பதவிகளுக்குரிய வேட்பு மனுக்கள் இப்பிரசுர திகதியிலிருந்து 14நாட்களுள் செயலாளருக்கு அனுப்பப்படல் வேண்டும்.

W. C. அன்னப்பா
செயலாளர்
ஆஸ்பத்திரி வீதி,
மானிப்பாய்
(4147)


## மரண அறிவித்தல்கள்

### மங்கையற்கரசி மகாலிங்கம்

B A. (Houns Sanskrit Ceylon)
[கூட்டுறவுப் பரிசோதகர் எண்பார்வை]

நயினை மு. கா. இராமலிங்கம் நல்லம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும் சுன்னாகம் சின்னத்துரை இராசம்மா தம்பதிகளின் மருமகளும் மகாலிங்கம் [இ. போ. ச. யாழ்] அவர்களின் பிரியபத்தினியுமான மங்கையற்கரசி மகாலிங்கம்[கூட்டுறவு பரிசோதகர் எண்பார்வை] அவர்கள் 9-6-88 ல் அகாலமாகிவிட்டார். இவர் சத்தியவாணி [யாழ் இந்து மகளிர்] தஷ்சிவி, ஆகியோரின் அன்புத் தாயாரும், கனகம்மா, சண்முகலிங்கம் [ப அ. ச. நயினை] புவனேஸ்வரி [ஆசிரியை இணுவில் சைவப்பிரகாச ம. வி] சிவகாமசுந்தரி, கணேசலிங்கம் [அரசினர் வைத்தியசாலை குருநகம] நடராஜா [உரிமையாளர் [வனஜா இன்டஸ்றீஸ்] இரத்தினம் [பி. அ. ச. உடுவில்], முருகையா ப. நோ. கூ. ச. சுன்னாகம்] சண்முகலிங்கம் [சவுதி அரேபியா] ஆகியவர்களின் அன்புச் சகோதரியும், கணபதிப்பிள்ளை [வர்த்தகர் கொழும்பு], கலைவாணி, நவரத்தினம் [விரிவுரையாளர் யாழ் நுண்கலைப் பீடம்] தபேஸ்வரன் [தபால் அலுவலகம் நயினை]. விமலாதேவி, இராஜேஸ்வரி ஈஸ்வரி அன்னரத்தினம், தெய்வநாயகி[ப. நோ. கூ. சங்கம் சுன்னாகம்] ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் சுன்னாகம் முத்துக்கிருஷ்ணர் வீதியிலுள்ள அவரது இல்லத்தில் 9-6-88 ல் நடைபெற்று தகனக் கிரியைகள் சுன்னாகம் கொத்தியாலடி மயானத்தில் நடைபெற்றது என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகியோருக்கு மிக்க துயரத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தகவல்:
சி. மகாலிங்கம்
(கணவர்)
(4253)


கொக்குவில் புதுக் கோவில் பரிபாலன சபை
**அதி முக்கிய அறிவித்தல்**

மேற்படி கோவிலுக்கு சொந்தமான கடைகளின் வாடகைக்காரர்கள் மாத வாடகைப் பணத்தை புதிய பரிபாலன சபையிடம் கொடுக்க வேண்டாமென்று சில தீயசக்திகள் வாடகைக்காரரிடம் கடித மூலமாகவும் நேரடியாகவும் தெரிவித்ததாக நாம் அறிகிறோம்.

தீய சக்திகளின் தூண்டுதல்களுக்கு சந்தர்ப்பவாதமாக கோவிலுக்கு சேர்மதியான வாடகை நிலுவைகளை செலுத்தத் தவறும் கடைக்காரர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதென்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம். ஆகையால் இவ்வறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட 7 நாட்களுக்குள் வாடகைக்காரர் யாவரும் கோவிற் கடைகளுக்குரிய வாடகை நிலுவைகளை 1988 ஆம் ஆண்டுக்காக கொக்குவில் பொது மக்களால் தெரிவு செய்யப்பட்ட கோவிற் பரிபாலனசபையினால் அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்

த. பொன்னம்பலம் — தலைவர்
சி வி இராஜேந்திரம் — பொதுக்காரியதரிசி
(4404)


## ஹெலி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இருந்து வாக்குப் பெட்டிகள் மாத்தறைக் கச்சேரிக்குக் கொண்டுவரப்படுவது தாமதமாகும் என்று நேற்று மாலை அறிவிக்கப்பட்டது

வீதித்தடை, வாகன போக்குவரத்துதடை ஆகியவை காரணமாக வாக்காளர் வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்ல மிகவும் கஷ்டப்பட்டனர் என்று அறிவிக்கப்பட்டது (ஒ-எ)

## ஆவரங்கால்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காலை உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது

வைத்தியசாலையில் இருந்து புத்தூர் கிழக்கில் உள்ள தாமுவின் இல்லத்துக்கு எடுத்துச் செல்லப்பட்ட பூதவுடல் 9-30 மணி தொடக்கம் இல்லத்தில் பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.

மாலை புத்தூர் கிழக்கு அந்திரானை மயானத்தில் இறுதிச் சடங்குகள் நடைபெற்றன.

தாமுவின் மரணத்திற்கு அச்சுவேலி புத்தூர் பகுதிகளில துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

வர்த்தக நிலையங்கள் சந்தைகள் கடைகள் வியாழக்கிழமை மூடப்பட்டிருந்தன. அச்சுவேலி புத்தூர் பகுதி பாடசாலைகளுக்கு மாணவர்கள் செல்லவில்லை. பாடசாலைகள் வெறிச்சோடிக் காணப்பட்டன.

அச்சுவேலி - யாழ்ப்பாணம் தனியார் மினிபஸ் சேவையும் நடைபெறவில்லை அச்சுவேலி புத்தூர் பகுதி வீதிகளில் இந்திய அமைதிப் படையினரின் ரோந்து நடவடிக்கை அதிகளவில் காணப்பட்டது

இலங்கை போக்குவரத்து சபையின் பஸ் சேவையும் பருத்தித்துறை தனியார் மினிபஸ் சேவையும அச்சுவேலி பஸ் நிலையத்திற்கு செல்லாமல் - வல்லை ஆவரங்கால் வீதியூடாக நடைபெற்றன [இ 11]

## தெற்கில்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

குண்டு ஒன்று வெடித்தது அச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

மாத்தறை நகரில் வாக்குப் பெட்டி ஒன்றைத் தூக்கிச் செல்ல முயற்சித்த ஒரு நபரை பாதுகாப்புப் படையினர் சுட்டுக் கொன்றனர்.

கொழும்பு பஸ் நிலையத்திலும் நேற்றுப் பகல் குண்டு ஒன்று வெடித்தது ஒருவரும் காயமடையவில்லை தென் மாகாணத்துக்கான பஸ் போக்குவரத்தைத் தடைசெய்யும் முயற்சியாக இக் குண்டு வைக்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

மாத்தறை நகரில் ஒலிபெருக்கிகள் மூலம் பொலீஸார் மக்களை வாக்களிக்க வரும்படி அறிவித்தனர்.

அங்கு கடைகள் மூடப்பட்டிருந்தன.

நகரில் பஸ் ஒன்று தாக்கப்பட்டது அதில ஒரு பயணி காயமடைந்தார்

ஹெலிக்கொப்டர்கள் மூலம் ஆகாயக் கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டது (ஒ-எ)

## அடையாள வேலை நிறுத்தம்

ஊர்காவற்றுறை மினிபஸ் சாரதிகள், நடத்துனர்கள் நாளை சனிக்கிழமை ஒருநாள் அடையாள வேலை நிறுத்தம் செய்ய இருப்பதாக துண்டுப் பிரசுரம் மூலம் அறிவித்துள்ளனர் [இ]


குதூகலத்
**திறப்பு விழா**

**சண்முகம் ரெக்ஸ் ஸ்தாபனத்தார்**
37 நவீன சந்தை, யாழ்ப்பாணத்தில்

10 - 6 - 88 இன்று காலை 10.00 மணிக்கு மீண்டும் தமது ஸ்தாபனத்தை திறக்க இருக்கிறார்கள் என்பதைத் தமது வாடிக்கையாளர்கள், நண்பர்கள் தாவாளர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறார்கள்.

இங்ஙனம்
உரிமையாளர்: சி. சண்முகலிங்கம்
96, ஈச்சமோட்டை றோட்,
யாழ்ப்பாணம்.
(4411)


## அடுத்த புதன்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வேறு அமைப்புகளாலும் இந்தியத் தரப்பிடம் முன் வைக்கப்பட்டு வந்துள்ளன.

தமிழ் மக்களுடைய அக்கறைகளையும் அபிலாசைகளையும் பாதுகாப்பதற்காகவே இலங்கை-இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதாக இந்தியத்தரப்பு வலியுறுத்திக் கூறிவருகின்றது.

ஆயினும் இராணுவ நடவடிக்கைகளையும அதனால் ஏற்படக்கூடிய சகல விதமான அசௌகரியங்களையும் அழிவுகளையும் தமிழ்பேசும் மக்கள் நாளாந்தம் எதிர்கொண்டு வருகின்றனர்

தமிழ்பேசும் மக்களின் அக்கறைகளையும், அபிலாசைகளையும் பூர்த்தி செய்ய இந்தியத் தரப்பு உண்மையில் விரும்பினால்—

தமிழ் மக்களுடைய கோரிக்கையான, நிபந்தனையற்ற யுத்த நிறுத்தத்தை ப் பிரகடனம் செய்து விடுதலைப் புலிகளுடன் நேரடியாகப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கவேண்டும்.

இந்தக் கோரிக்கை ஏகோபித்ததும் ஏகமனதானதும் என்பதை வெளிக்காட்டி வலியுறுத்தும் முகமாக எதிர்வரும் புதன்கிழமை, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வெள்ளைக் கொடி தினமாக அனுஷ்டிக்கப்பட உள்ளது,

இவ்வாறு அந்த அறிக்கையில தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-10)

## பிரபாவுக்கு .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

என்றும்—

போர் நிறுத்தம் செய்து உடனடியாக சுமுக நிலைக்கு வழிகாண வேண்டும் என்றும் பிரதமரைக் கேட்டுக்கொள்ளுகின்றேன்—

இவ்வாறு அந்த வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு. கருணாநிதியின் பிறந்த நாள் சென்ற [illegible] கொண்டாடப்பட்டது. [இ - எ]


**புதிய வெளியீடு விற்பனையாகின்றது**

புலமைப் பரிசில் பரீட்சை ஆண்டு—5
பயிற்சி நூல் தமிழ், கணிதம்
விலை ரூபா 25- 00

புலமைப் பரிசில் பரீட்சை ஆண்டு- 6
தமிழ் மொழி
விலை ரூபா 20• 00

ஆங்கிலம்
NEW CLASS WORK
BOOK YEAR 9
Price Rs 25. 00

கிடைக்குமிடம் :
ஸ்ரீ லங்கா புத்தகக் கம்பனி
யாழ்ப்பாணம்-
(C/ 5412)



இசுசு, பிஎச்சி மொறிஸ் ஒக்ஸ்போர்ட் அசோக் லேலண்ட், உதிரிபாகங்கள்
**உடன் விற்பனைக்குண்டு**
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்
விபரங்களுக்கு:
**மேர்சன்ட் பிறின்ஸ் லிமிட்டேட்,**
555, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம் C 5413


## திரு. சண்முகம் நடராசா

புங்குடுதீவு 4 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் சீனியர் ஒழுங்கை வண்ணார்பண்ணையை வதிவிடமாகவும் கொண்ட திரு சண்முகம் நடராசா (ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரி) அவர்கள் 9-6-88 ல் காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி, சண்முகம் அவர்களின் அன்பு மகனும், காலஞ்சென்ற சுப்பையா திருமதி தங்கம்மா அவர்களின் அன்பு மருமகனும் யோகம்மாவின் அருமைக் கணவரும், பரஞ்சோதி (பிரான்ஸ்) நவமணிதேவி, ஜெகநாதன் (ஜெகன் மாஸ்ரர், பிரான்ஸ்) நளாயினி காலஞ்சென்ற யோகநாதன் ஆகியோரின் அருமைத் தந்தையும் திரு. இராசையா (கட்டடத்திணைக்களம் மன்னார்) சுசிலா தேவி, சியாமளா ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற திரு. நல்லதம்பி அவர்களின் அருமைச் சகோதரரும், தனஞ்சயன் தாரணி, தமயந்தி, மைதிலி, திலீபன், திருவேந்திரன் யாழினி தட்சாயினி ஜெனன் ஆகியோரின் அன்பு பாட்டனுமாவார். இறுதிக் கிரியைகள் 10 6-88 வெள்ளிக்கிழமை பி. ப. 3.00 மணிக்கு இல்லத்தில் நடைபெற்று கோம்பயன் மணல் மயானத்தில் தகனஞ் செய்யப்படும். உறவினர் நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்

இல 40/18 சீனியர் ஒழுங்கை
யாழ்ப்பாணம்.

தகவல்:
S. இரத்தினவேல்
ஆசிரியர் பண்டத்தரிப்பு
(4252)


இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் [பிறைவேற்] லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2. இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 10-06-1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and published by New Uthayan Publications (Pvt) Ltd. 292/2, Navalar Road Jaffna on Friday, 10 th June 1988.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org